بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 7

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 16

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

19 ரமலான் 1443 ஹிஜ்ரி கமரி 21 ஷஹாதத் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 21 ஏப்ரல் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَمَنۡ كَانَ مَرِيۡضًا اَوۡ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنۡ اَيَّامٍ اُخَرَ ؕ يُرِيۡدُ اللّٰهُ بِکُمُ الۡيُسۡرَ وَلَا يُرِيۡدُ بِکُمُ الۡعُسۡرَ وَلِتُکۡمِلُوا الۡعِدَّةَ وَلِتُکَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا هَدٰٮكُمۡ وَلَعَلَّکُمۡ تَشۡكُرُوۡنَ

நோன்பாளியாகவோ பயணியாகவோ இருப்பவர் (விட்டுப்போன நோன்பை) மற்ற நாள்களில் கணக்கிட்டு (நோற்கவும்). அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகிறான். உங்களுக்கு கடினத்தை(த்தர) விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையை பூர்த்தி செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனை பெருமைப்படுத்துவதற்காகவும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவுமே (இந்தக் கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான்). (2:186)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இறைவன் ஆற்றலும் வல்லமையும் மிக்கவன் ஆவான். அவன் நாடினால் ஒரு இயலாதவருக்கு கூட நோன்பு வைப்பதற்கு ஆற்றல் வழங்கி விடுகின்றான். மனிதன் உண்மையான உள்ளத்துடனும், உயர் தூய்மையுடனும் இறைவனிடத்தில் இந்த மாதத்தில் என்னை இழப்பிற்குரியவனாக ஆக்காதே என்று வேண்டினால் இறைவன் அவரை இழப்பிற்குரியவராக ஆக்குவதில்லை**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...**

ஆற்றலுக்கேற்ப இறைவனின் கடமைகளை ஆற்றுவது மனிதன் மீது கடமையாக இருக்க வேண்டும். وَاَنۡ تَصُوۡمُوۡا خَيۡرٌ لَّـكُمۡ என்று நோன்பை குறித்து இறைவன் கூறுகின்றான். பொருள்: நீங்கள் நோன்பு நோற்றால் அது உங்களுக்கு மிகவும் நன்மைக்குரிய விஷயமாகும். ஒரு முறை எனது உள்ளத்தில் ஃபித்யா எதற்காக நியமிக்கப்பட்டுள்ளது என்ற எண்ணம் தோன்றியது. அப்போது நற்பேறு பெறுவதற்காக என்பது தெரிய வந்தது. நோன்பிற்கான நற்பேறு அதன் மூலம் கிடைக்கின்றது. இறைவனுடைய இருப்பு தான் மனிதனுக்கு நற்பேறு வழங்குகின்றது. ஒவ்வொரு விஷயத்தையும் இறைவனிடமே வேண்ட வேண்டும். இறைவன் ஆற்றலும் வல்லமையும் மிக்கவன் ஆவான். அவன் நாடினால் ஒரு இயலாதவருக்கு கூட நோன்பு நோற்பதற்கு ஆற்றல் வழங்கி விடுகின்றான். எனவே ஃபித்யாவின் நோக்கம் இதுவே ஆகும். அதாவது அதன் மூலம் மனிதனுக்கு ஆற்றல் கிடைக்க வேண்டும். மேலும் இது இறை அருளால் கிடைக்கின்றது. இறைவா! இது உனது அருளுக்குரிய ஒரு மாதம் ஆகும். நான் இதிலிருந்து இழப்பிற்குரியவனாக இருந்து விடுகின்றேன். அடுத்த வருடம் நான் உயிருடன் இருப்பேனா, இல்லையா என்பது தெரியாது. அல்லது விடுபட்ட இந்த நோன்புகளை என்னால் வைக்க முடியுமா? இல்லையா? என்பதும் தெரியாது என்று துஆ செய்வது எனது பார்வையில் சிறந்ததாகும். இதன் மூலம் நற்பேறை வேண்டினால் எனக்கு நம்பிக்கை உள்ளது. அதுபோன்ற உள்ளத்திற்கு இறைவன் ஆற்றலை வழங்கி விடுவான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 426 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

**குறைவாக பேசுவதும், குறைவாக உண்பதும், குறைவாக தூங்குவதும் ஆன்மீக வாழ்க்கையின் உயிராகும் என்று ஒரு சூஃபி கூறியுள்ளார். ரமலான் மாதம் இந்த தத்துவத்தின் முழு சாராம்சத்தையும் தன்னுள் கொண்டுள்ளது**

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

நோன்பின் மாபெரும் ஒரு நன்மை என்னவென்றால், அதன் மூலம் மனிதனுக்கு நன்மை செய்வதற்குரிய கடினத்தை சகித்துக் கொள்கின்ற பழக்கும் ஏற்பட்டு விடுகின்றது. மனிதன் உலகில் பல வகையான பணி செய்கின்றான். அவன் கடினமாக உழைக்கவும் செய்கின்றான். அவன் வீணாகவும் சுற்றித் திரிகின்றான். அவன் இங்கும் அங்கும் சுற்றுகின்றான். வீண் பேச்சுக்களை பேசுகின்றான். மனித மூளையும் முற்றிலும் ஓய்வாக இருப்பதில்லை. அவனது உடலும் ஓய்வாக இருப்பதில்லை. ஏதாவதொரு பணியை மனிதன் நிச்சயம் செய்து கொண்டிருக்கின்றான். ஆனால் சில வீணான பணிகள் இருக்கின்றன. சில தீய பணிகளும் உள்ளன. சில பயனுள்ள பணிகளும் உள்ளன. சில மிகவும் நல்ல பணிகளும் உள்ளன. ஆனால் ரமலான் மனிதனுக்கு எப்படிப்பட்ட ஒரு பணியை செய்வதற்கு பழக்கத்தை ஏற்படுத்துகின்றது என்றால் அதன் விளைவாக அவனுக்கு நன்மையான பணிகளை செய்வதில் கடினங்களை சகித்துக் கொள்ளும் பழக்கம் ஏற்பட்டு விடுகின்றது. மனித வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கும், ஓய்விற்கும் என்ன விஷயங்கள் உள்ளன? இதே உணவும், பானமும், தூக்கமும், பாலின தொடர்புகளும் ஆகும். நாகரீகத்தின் உயர் முன்மாதிரி பாலின தொடர்புகளாகும். அதில் நண்பர்களை சந்திப்பதும், உறவினர்களோடு தொடர்பு வைப்பதும் அடங்கும். ஆனால் பாலின தொடர்புகளில் எல்லாவற்றையும் விட மிக நெருக்கமான தொடர்பு என்பது கணவன், மனைவிக்கிடையிலான தொடர்பு ஆகும். எனவே மனித ஓய்வு என்பது இந்த சில விஷயங்களையே சார்ந்திருக்கின்றது. அவன் உண்கின்றான். அவன் பருகுகின்றான். அவன் தூங்குகின்றான். மேலும் அவன் பாலின தொடர்புகளை மேற்கொள்கின்றான். குறைவாக பேசுவதும், குறைவாக உண்பதும், குறைவாக தூங்குவதும் ஆன்மீக வாழ்க்கையின் உயிராகும் என்று ஒரு சூஃபி கூறியுள்ளார். ரமலான் மாதம் இந்த தத்துவத்தின் முழு சாராம்சத்தையும் தன்னுள் கொண்டுள்ளது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 378 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## நபிமொழி

**நோன்பாளிக்கான முக்கிய வழிகாட்டல்**

1898. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நோன்பைத் தவிர ஆதமின் மகனின் ஒவ்வொரு செயலும் அவனுக்குரியதாகும். ஏனென்றால் நோன்பு எனக்கு உரியது. அதற்கு நானே கூலி கொடுப்பேன் என்று அல்லாஹ் கூறினான். நோன்பு (பாவங்களிலிருந்து காக்கும்) கேடயமாகும். எனவே உங்களில் நோன்பு நோற்பவர் கெட்ட பேச்சுக்கள் பேச வேண்டாம். கூச்சலிட்டு சச்சரவு செய்ய வேண்டாம். யாரேனும் அவரை ஏசினால் அல்லது அவருடன் சண்டையிட்டால் நான் நோன்பாளி என்று அவர் சொல்லட்டும்.

முஹம்மதின் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மேல் ஆணையாக! நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடை அல்லாஹ்விடம் கஸ்தூரியின் வாடையை விட விருப்பமானதாகும். நோன்பாளிக்கு இரண்டு மகிழ்ச்சிகள் உள்ளன. முதலாவதாக, நோன்பு திறக்கும்போது அவர் மகிழ்ச்சியடைகின்றார். இரண்டாவதாக, தன் இறைவனைச் சந்திக்கும்பொழுது நோன்பின் காரணமாக அவர் மகிழ்ச்சியடைகின்றார். (சஹீஹ் புகாரி தொகுதி 3, பாடம் நோன்பு – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை 18 மார்ச் 2022*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஈதுல் ஃபித்ர் பேருரை சுருக்கம் – 14 மே 2021*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**மிகவும் அபாயகரமான நிலைமையில், போருக்கெதிராக மாபெரும் சஹாபிகள் ஆலோசனை வழங்கியபோதும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக எல்லா வகையான அபாயங்களையும் சகிப்பதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தயாராகி விடுகின்றார்கள். இது மாபெரும் இறைத்தூதரை பின்பற்றுதலாகும்.**

**உலகம் தம்மைப் படைத்த இறைவனை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்பதற்காக குறிப்பாக துஆ செய்யுங்கள்**

**மதிப்பிற்குரிய மவ்லானா முபாரக் நஸீர் சாஹிப் அவர்களின் நற்குறிப்பும், ஜனாஸா காயிப் தொழுகையும்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 18 மார்ச் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு அமான் மாதம் **18 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் நற்குறிப்பில் ஸகாத் கொடுக்க மறுத்தவர்களைப் பற்றிய அன்னார் (ரலி) அவர்களின் சிந்தனை மற்றும் அன்னாரின் நடைமுறைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டு வந்தது. இது தொடர்பாக தபரி வரலாற்று நூலில் மேலும் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. அஸத், கத்ஃபான், தை போன்ற கோத்திரங்கள் துலைஹா பின் குவைலத் அதாவது பொய் நபித்துவ வாதியின் கைகளில் சில குறிப்பிட்ட மக்களைத் தவிர ஒன்றுகூடின. அஸத் கோத்திரத்தின் மக்கள் ஸமீரா என்ற இடத்தில் ஒன்றுகூடினார்கள். ஆத் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு நபரின் ஸமீரா என்ற பெயர் அந்த இடத்திற்கு சூட்டப்பட்டது. அது மக்காவின் வழிப் பாதையில் உள்ள ஒரு சமுதாயம் ஆகும். இந்த பகுதியை சுற்றிலும் கருமை நிற மலை உள்ளது. அதன் காரணமாக அந்த இடத்திற்கு இந்தப் பெயர் வைக்கப்பட்டுள்ளது.

ஃபஸாரா மற்றும் கத்ஃபான் கோத்திரத்தின் மக்கள் தனது நட்புக் கோத்திரத்துடன் தீபா என்ற இடத்திற்கு தெற்கில் ஒன்று கூடினர். தை கோத்திரம் தமது பகுதியின் எல்லையில் ஒன்று கூடியது. ஸஃலபா பின் சஅத் முர்ரா மற்றும் அப்ஸ் போன்ற கோத்திரங்களின் ஆதரவு கோத்திரமான ஸபதாவின் அப்ரக் என்ற இடத்தில் ஒன்று கூடினர். சபதா என்ற இடம் மூன்று நாள் தொலைவில் அமைந்துள்ள மதீனாவின் பள்ளத்தாக்குகளில் ஒரு பள்ளத்தாக்கு ஆகும். அப்ரகுஸ் ஸபதா என்ற கோத்திரம் பனூ சுப்யான் கோத்திரத்தின் பகுதிகளை சார்ந்ததாக இருந்தது. பனூ கினானாவின் சில மக்களும் அவர்களுடன் வந்து இணைந்து கொண்டனர். ஆனால் அந்தப் பகுதி அவர்களுக்குரியதாக இருக்கவில்லை.

எனவே அந்த மக்கள் இரு கூட்டத்தினராக உருவாகினர். ஒரு கூட்டம் அப்தர் என்ற இடத்தில் தங்கியிருந்தது. மற்றொரு கூட்டம் துல்கஸ்ஸாவிற்கு சென்று விட்டது. துல் கஸ்ஸா என்ற இடம் மதீனாவிலிருந்து 40 மைல் தொலைவில் அமைந்துள்ள ஓர் இடமாகும். துலைஹா, ஹிபால் என்பவரை அவர்களின் உதவிக்காக அனுப்பி வைத்தார். ஹிபால், துலைஹாவின் சகோதரரின் மகனாக இருந்தார். எவ்வாறிருப்பினும் இவ்வாறு ஹிபால் துல்கஸ்ஸா வாசிகளின் தலைவராக ஆகி விட்டான். அஸத், லைஸ், தீல் மற்றும் முத்லிஜ் போன்ற கோத்திரங்களில் அங்கு அவருக்கு ஆதரவு கோத்திரங்கள் இருந்தன.

அவ்ஃப் பின் ஃபுலான் பின் ஸினான் அப்ரக் என்ற இடத்தில் தங்கியிருந்த முர்ரா கோத்திரத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். சஃலபா மற்றும் அப்ஸ் கோத்திரத்திற்கு ஹாரிஸ் பின் குலான் தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் பனூ சுபைஹ் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். இந்த கோத்திரங்கள் அனுப்பி இருந்த தமது குழுக்கள் மதீனாவை வந்தடைந்தன. அவர்கள் அனைவரும் ஒன்று கூடினர். அதன் பிறகு ஒவ்வொரு கோத்திரமும் தத்தமது ஒரு குழுவை உருவாக்கி அனுப்பி வைத்தது. வந்த அந்த மக்கள் மதீனாவின் தலைவர்களிடத்தில் தங்கினார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களைத் தவிர மற்ற அனைவரும் அவர்களை தமது வீட்டில் விருந்தினர்களாக ஆக்கிக் கொண்டனர். அவர்கள் தொழுது வருவார்கள். ஆனால் ஸக்காத் கொடுக்க மாட்டார்கள் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அவர்களை ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களிடம் அழைத்து வந்தனர். அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை உண்மையில் உறுதிப்படுத்தி விட்டான். இவர்கள் ஒட்டகத்தை கட்டக் கூடிய கயிற்றை கொடுக்கவில்லை என்றாலும் நான் இவர்களுடன் ஜிஹாத் செய்வேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 254, 255 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 67, 290 தொகுதி 1 பக்கம் 89 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா லி இப்னீ ஹிஷாம் பக்கம் 434 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நிலைப்பாட்டைப் பார்த்த பிறகு ஸகாத் கொடுக்க மறுத்தவர்களின் குழு மதீனாவிலிருந்து திரும்பிச் செல்ல தொடங்கியபோது அவர்களின் நிலை என்னவாக இருந்தது? என்பதைப் பற்றி குறிப்பிட்டவாறு ஒரு வரலாற்று ஆசிரியர் இவ்வாறு எழுதுகின்றார்:

அந்தக் குழுவினர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் உறுதிப்பாட்டை பார்த்தபோது மதீனாவிலிருந்து திரும்பிச் சென்று விட்டனர். ஆனால் மதீனாவிலிருந்து செல்லும் நேரத்தில் இரண்டு விஷயங்கள் அவர்களின் எண்ணங்களில் இருந்தன. ஸகாத் கொடுக்க மறுப்பது தொடர்பாக எந்த உரையாடலும் பயனளிக்கவில்லை. இது தொடர்பாக இஸ்லாத்தின் கட்டளை தெளிவானதாகும். கலீஃபா தனது கருத்திலிருந்தும், உறுதிப்பாட்டிலிருந்தும் பின்வாங்குவதற்கு எந்த நம்பிக்கையும் இல்லை.

குறிப்பாக சான்றுகள் வெளிப்பட்ட பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்துடன் முஸ்லிம்களும் உடன்பட்டு விட்டனர். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஆதரவாக உறுதுணையாக நின்றனர்.

(2) முஸ்லிம்களின் பலவீனம் மற்றும் குறைவான எண்ணிக்கை ஆகியவற்றை நல்வாய்ப்பாக கருதி இஸ்லாமிய அரசாங்கத்தை அகற்றிவிட்டு அதன் மார்க்கத்தை அழித்து விடும் வகையில் வலிமையான தாக்குதலை மதீனாவின் மீது செய்ய வேண்டும்.

(டாக்டர் முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) கி ஷக்ஸிய்யத் அவ்ர் கார்நாமே என்ற நூல் பக்கம் 278 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் கான் கட் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

இவ்வாறு நாம் மதீனாவை கைப்பற்றி விடலாம் என்பது அவர்களின் எண்ணமாக இருந்தது. எவ்வாறிருப்பினும் அந்த மக்கள் திரும்பிச் சென்று தற்போது மதீனாவில் மிகக் குறைவான நபர்களே உள்ளனர் என்று தமது கோத்திரத்து மக்களிடம் அவர்கள் கூறினர். மேலும் தாக்குதல் தொடுப்பதற்கு அவர்களுக்கு இக்குழுவினர் ஆர்வமூட்டினர். அதே நேரம் மற்றொரு பக்கம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் கவனமற்றவர்களாக இருக்கவில்லை. அந்தக் குழுவினர் சென்ற பிறகு மதீனாவின் நான்கு திசைகளிலும் முறையாக காவலாளிகளை அன்னார் (ரலி) அவர்கள் நியமனம் செய்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூது (ரலி) ஆகியோர் அந்தப் பணிக்காக நியமிக்கப்பட்டனர்.

ஓர் அறிவிப்பில் ஹஸ்ரத் சஅத் பின் அபி வக்காஸ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோரும் இந்த பாதுகாப்பு பணியில் நியமிக்கப்பட்டார்கள் என்றும் வருகின்றது. அது மட்டுமின்றி அனைவரும் பள்ளிவாசலில் ஒன்றுகூடுமாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனைத்து

மதீனா வாசிகளுக்கும் கட்டளையிட்டார்கள். முழு பூமியும் நிராகரிப்பாளர்களாக மாறி விட்டது என்று அவர்களிடம் கூறினார்கள். மேலும் அவர்களின் குழுவினர் உங்களின் குறைவான எண்ணிக்கையையும் பார்த்து விட்டு சென்றுள்ளனர். அவர்கள் பகல் நேரத்தில் தாக்குதல் தொடுப்பார்களா? அல்லது இரவு நேரத்தில் உங்கள் மீது தாக்குதல் தொடுப்பார்களா? என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். அவர்களின் மிகவும் அருகிலுள்ள கூட்டத்தினர் இங்கிருந்து ஒரு பரீத் அளவிலான தொலைவில் உள்ளனர். அப்போது ஒரு பரீத் என்பது 12 மைல்களுக்கு சமமாகும். எனவே அந்தக் குழுவினர் 12 மைல் தொலைவில் உள்ளனர். நாம் அவர்களின் நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு விடலாம். மேலும் அவர்களுடன் சமாதானம் செய்து கொள்ளலாம் என்று சில மக்கள் விருப்பப்பட்டனர். ஆனால் நாம் அவர்களின் கூற்றை ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் அவர்களின் நிபந்தனைகளை மறுத்து விட்டோம். எனவே தற்போது போருக்கு முற்றிலும் தயாராகிக் கொள்ளுங்கள் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அனுமானம் முற்றிலும் சரியானதாக இருந்தது. ஸகாத் கொடுக்க மறுத்தவர்களின் குழுவினர் மதீனாவிலிருந்து திரும்பிச் சென்ற பிறகு மூன்று இரவுகளில் மட்டும் தனித்திருந்தனர். அதற்குள் அந்த மக்கள் இரவு ஆனவுடனேயே மதீனா மீது தாக்குதல் தொடுத்து விட்டனர்.

தமது நட்புக் கோத்திரங்களில் துகிஸா என்ற ஒரு கூட்டத்தினரை மட்டும் தேவைப்படும் நேரத்தில் துணைப் படையாக பயனளிப்பார்கள் என்ற அடிப்படையில் அவர்கள் விட்டு விட்டு வந்தனர். துகிஸா, பனூ ஃபஸாரா கோத்திரத்தை சார்ந்த ஒரு கோத்திரத்தினர் ஆவர். மேலும் அவர்களின் தங்குமிடம் ஐபதா மற்றும் நஹல் ஆகியவற்றிற்கு மத்தியில் உள்ளது. எவ்வாறிருப்பினும் தாக்குதல் தொடுக்கக் கூடிய அந்த மக்கள் இரவு நேரத்தில் மதீனாவின் எல்லைகளை வந்தடைந்தனர். அங்கு ஏற்கனவே போர் வீரர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களை பின்தொடர்ந்து சில மக்கள் இருந்தனர். அவர்கள் மலை மீது ஏறிக் கொண்டிருந்தார்கள். காவலாளிகள் எதிரிகளின் வருகையை குறித்து அறிவித்து கொடுத்தனர். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எதிரிகளின் வருகையைக் குறித்து தகவல் கொடுப்பதற்கும் நபர்களை அனுப்பி வைத்தனர். அனைவரும் தத்தமது இடத்தில் நிலைபெற்றிருங்கள் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தூதுச் செய்தியை அனுப்பி வைத்தார்கள். அதன்படி முழுப் படையும் அப்படியே செயலாற்றியது.

பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பள்ளிவாசலில் இருந்த முஸ்லிம்களை அழைத்துக் கொண்டு ஒட்டகங்களின் மீது சவாரி செய்து அவர்களை நோக்கி புறப்பட்டார்கள். மேலும் எதிரி புறமுதுகு காட்டி ஓடினான். முஸ்லிம்கள் தமது ஒட்டகங்களில் அவர்களை பின்தொடர்ந்து சென்றார்கள். எந்த அளவுக்கென்றால் அவர்கள் துகிஸா என்ற இடத்தை சென்றடைந்தார்கள். தாக்குதல் தொடுக்கக் கூடிய உதவிப் படையினரின் குழுக்கள் தோலால் ஆன தண்ணீர் பைகளில் காற்றை நிறைத்துக் கொண்டு அதை கயிறுகளால் கட்டி முஸ்லிம்களுக்கு எதிராக புறப்பட்டார்கள். அவர்கள் அந்த தண்ணீர் பைகளை தமது கால்களால் எட்டி உதைத்து ஒட்டகங்களுக்கு முன்னால் தொங்க விட்டு விட்டார்கள். அதனால் ஏதோ ஒன்று தொங்கிக் கொண்டே வருகிறது என்று எண்ணி ஒட்டகம் அந்தப் பைகளை கண்டு பயந்து துள்ளியது. ஏனைய முஸ்லிம்களின் அனைத்து ஒட்டகங்களும் எந்த அளவிற்கு மிரண்டு ஓடின என்றால், அவர்களால் அவற்றை கட்டுப்படுத்த முடியவில்லை. எந்த அளவுக்கென்றால் அவர்கள் மதீனா வந்தடைந்து விட்டனர். ஆனால் இதனால் முஸ்லிம்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. அதே நேரம் அவர்களின் கைகளுக்கு எந்தப் பொருளும் கிடைக்கவில்லை.

முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இந்த வெளிப்படையான பின்னடைவிலிருந்து எதிரிகளுக்கு இந்த எண்ணம் தோன்றியது. அதாவது முஸ்லிம்கள் பலவீனமானவர்களாக உள்ளனர். அவர்களிடம் எதிர்த்து போரிடுவதற்கு ஆற்றல் இல்லை. இந்த குறைபாடான எண்ணத்தால் தமது தோழர்களுக்கு துல்கஸ்ஸாவில் தங்கி இருந்த இந்த சம்பவத்தைப் பற்றி அவர்கள் தகவல் கொடுத்தனர். அவர்கள் இந்த செய்தியை அப்படியே நம்பிக் கொண்டு அந்தக் கூட்டத்திற்கு அருகில் வந்து விட்டனர். ஆனால் அல்லாஹ் அவர்களைக் குறித்து வேறொரு முடிவை செய்திருந்தான் என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. அல்லாஹ் அதனை எந்நிலையிலும் நிறைவேற்றியே தீர இருந்தான். இரவு முழுவதும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது படையை ஆயத்தப்படுத்துவதில் மும்முரமாக இருந்தார்கள். அனைவரையும் தயார்படுத்தி இரவின் கடைசி பகுதியில் முழு படையையும் ஒழுங்குபடுத்தி நடைபயணமாக அனுப்பி வைத்தார்கள்.

நுஃமான் பின் முகர்ரிம் மைமனாவிற்கும், அப்துல்லாஹ் பின் முகர்ரின் மைஸராவிற்கும், சுவைத் பின் முகர்ரின் படையின் பிற்பகுதிக்கும் கண்காணிப்பாளர்களாக இருந்தனர். அவர்களுடன் சில சவாரிகளும் இருந்தன. தற்போது ஃபஜர் உதயமாகி இருக்கவில்லை. அதற்குள் முஸ்லிம்கள் மற்றும் ஸக்காத் கொடுக்க மறுத்தவர்கள் இருவரும் ஒரே மைதானத்தில் இருந்தனர். முஸ்லிம்களின் எந்தவொரு அசைவும், மூச்சும் எதிரிகளுக்கு தெரிய வரவில்லை. எந்த அளவுக்கென்றால் முஸ்லிம்கள் அவர்களை வாள்களால் வெட்டி வீழ்த்த தொடங்கி விட்டனர். பின்னர் இரவின் பிற்பகுதியில் சண்டை நிகழ்ந்தது. சூரிய ஒளிக்கதிர்கள் இன்னும் உதயமாகி தமது கம்பீரத்துடன் ஒளிமயமாகவில்லை. அதற்குள் நிராகரிப்பாளர்கள் தோல்வியடைந்து ஓடி விட்டனர்.

பின்னர் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: முஸ்லிம்கள் எதிரிகளின் அனைத்து கால்நடைகளையும் கைப்பற்றிக் கொண்டனர். இந்த சம்பவத்தில் ஹிபால் கொல்லப்பட்டான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மக்களை பின்தொடர்ந்து சென்றார்கள். எந்த அளவுக்கென்றால் துல்கஸ்ஸா என்ற இடத்தை அடைந்து நின்று விட்டார்கள். அல்லாஹ் முஸ்லிம்களுக்கு வழங்கிய முதல் வெற்றியாக அது இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நுஃமான் பின் முகர்ரிம் என்பவருடன் சில மக்களை அனுப்பி அங்கேயே பணியமர்த்தி விட்டார்கள். மேலும் சுயமே மதீனா திரும்பி வந்து விட்டார்கள். இது தபரி வரலாற்று நூலின் சான்றாகும்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 255, 256 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல்பதாயா வந்நஹாயா தொகுதி 3 பக்கம் 308 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 297)

இந்தப் போரை பத்ர் போருடன் ஒப்புமைபடுத்தியவாறு ஒரு நூலாசிரியர் இவ்வாறு எழுதுகின்றார்: அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஈமான், உறுதி, முன்னெச்சரிச்சை போன்றவற்றை வெளிப்படுத்தினார்கள். அதிலிருந்து முஸ்லிம்களின் உள்ளங்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் காலத்து போர்களின் நினைவுகளை புதுப்பித்து கொண்டன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் நடந்த இந்த முதல் போர் பெருமளவில் பத்ர் போருடன் ஒப்புமை கொண்டுள்ளது. பத்ர் போர் நாளன்று முஸ்லிம்களின் எண்ணிக்கை வெறும் 300 என்ற அளவிலேயே இருந்தது. அதே நேரம் இணை வைப்பவர்களின் எண்ணிக்கை ஓராயிரத்தையும் விட கூடுதலாக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் எதிரிகள் நிகழ்த்திய இந்த போரின் சம்பவம் நிகழ்ந்தபோது அந்த சந்தர்ப்பத்திலும் முஸ்லிம்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. அந்தப் போரில் அப்ஸ், துபியா மற்றும் கத்ஃபான் போன்ற கோத்திரங்கள் பெரும் கூட்டத்துடன் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்தன. பத்ர் சந்தர்ப்பத்தில் அல்லாஹ் இணை வைப்பவர்களுக்கு எதிராக முஸ்லிம்களுக்கு வெற்றியை வழங்கினான். இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் அன்னார் (ரலி) அவர்களின் தோழர்கள் முழுமையான ஈமானிற்கு சான்று பகர்ந்தார்கள். மேலும் எதிரிகளின் மீது வெற்றி பெற்றார்கள். எவ்வாறு பத்ர் போர் தொலைதூர விளைவுகளை கொண்டிருந்ததோ அதேபோன்று இந்தப் போரிலும் முஸ்லிம்களின் வெற்றி இஸ்லாத்தின் எதிர்காலத்தின் மீது மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) என்ற நூல் பக்கம் 150, 151 – லாஹூரிலுள்ள இஸ்லாமியா அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

பனூ துபியான் மற்றும் பனூ அப்ஸ் ஆகிய கோத்திரங்கள் இந்த தோல்வியின் காரணமாக கோபத்திற்கு ஆளாகி தம்மிடம் தங்கியிருந்த முஸ்லிம்கள் மீது திடீர் தாக்குதல் தொடுத்து அவர்களுக்கு மிகக் கடுமையான வேதனையைக் கொடுத்து, பல வகையான தண்டனையை வழங்கி ஷஹீதாக்கி விட்டார்கள். ஆயுதமின்றி நிராயுதபாணியாக தமது பகுதிகளில் வசித்து வந்த முஸ்லிம்களை அவர்கள் கொன்று விட்டனர். ஷஹீதாக்கினர். இவ்வாறு அவர்கள் பழிவாங்கினர். அவர்களை பின்தொடர்ந்து ஏனைய கோத்திரங்களும் அவ்வாறே செய்தன. இந்த அநீதிகளைக் குறித்து தகவல் கொடுக்கப்பட்டபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு சத்தியம் செய்தார்கள்: அதாவது நாம் இணை வைப்பவர்களுடன் மிகவும் கடுமையான போர் செய்வோம். முஸ்லிம்களை

கொலை செய்த ஒவ்வொரு கோத்திரடத்துடனும் அதற்கு பழிவாங்கும் விதமாக அவர்களை கொல்வோம் என்று சத்தியம் செய்தார்கள்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 256 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தலைமை மற்றும் வழிகாட்டுதலில் ஸக்காத் கொடுக்க மறுத்தவர்களின் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டபோது ஏனைய பலவீனமான மற்றும் தாக்கத்திற்குள்ளான கோத்திரங்கள் ஒன்றன் பின் ஒன்றாக தமது ஸக்காத்தை எடுத்துக் கொண்டு மதீனாவை நோக்கி வரத் தொடங்கின. ஆற்றல் வாய்ந்த கோத்திரங்களின் நிலை இவ்வாறு ஆகி விட்டதை கண்ட பலவீனமான கோத்திரங்களும் ஸக்காத்தை எடுத்துக் கொண்டு மதீனாவிற்கு வரத் தொடங்கின. ஒரு கோத்திரம் இரவின் முதல் பகுதியில் ஸக்காத்தை எடுத்துக் கொண்டு வந்தது. மற்றொரு கோத்திரம் இரவின் நடுப் பகுதியில் வந்தது. மற்றொரு கோத்திரம் இரவின் இறுதிப் பகுதியில் வந்தது. இந்த மக்கள் மதீனாவிற்கு வருகை தந்ததும் ஒவ்வொரு கூட்டத்தினருக்கு மத்தியிலும் அவர்கள் இந்த விஷயத்தை மக்களிடம் கூறி வந்தனர். அதாவது இந்த மக்கள் அச்சமூட்டக் கூடியவர்களாக இருக்கின்றனர். அதாவது ஏதாவது தீய செய்தியை கொண்டு வருபவர்களாக உள்ளனர் என்று கூறி வந்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எல்லா சந்தர்ப்பத்திலும் இந்த மக்கள் நற்செய்தி வழங்கக் கூடியவர்கள். ஆவார்கள். உதவிக்காக வந்துள்ளனர். பாதிப்பை ஏற்படுத்த வரவில்லை என்று கூறி வந்தார்கள். எனவே இந்த கூட்டத்தினர் இஸ்லாத்திற்கு ஆதரவு அளிப்பதற்காக வந்துள்ளனர் என்பது முறையாக தெரிய வந்தபோது ஸக்காத் செல்வங்களை கொண்டு வரக் கூடிய கூட்டத்தினராக அவர்கள் இருந்தனர். அப்போது முஸ்லிம்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் தாங்கள் மிகவும் அருளுக்குரிய நபர் ஆவீர்கள். தாங்கள் எப்போதும் நற்செய்தியையே வழங்கி வந்துள்ளீர்கள் என்று கூறினர்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 256 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: தீய செய்தியுடனும், தீய எண்ணத்துடனும் வரக் கூடிய நபர்கள் வேக வேகமாக செல்வார்கள். ஆனால் நற்செய்தி கொண்டு வரக் கூடிய குழுவினர் மெதுவாகவும், அமைதியாகவும் செல்கின்றார்கள். நான் அவர்களின் வேகத்திலிருந்தே கணித்திருந்தேன்.

(மனீர் முஹம்மது கஸ்பான் அவர்கள் எழுதிய அல்மஸீரத்துல் இஸ்லாமியா என்ற நூல் பக்கம் 50 – 2015 ஆம் ஆண்டு தாருல் இஸ்லாமில் அச்சிடப்பட்டது)

ஸக்காத் கொடுக்க மறுத்தவர்களுக்கு எதிரான போரில் கிடைத்த வெற்றிக்குப் பிறகு ஸக்காத் வசூலானது தொடர்பாக தபரி வரலாற்றில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அக்காலத்தில் மதீனாவில் எந்த அளவிற்கு தருமங்கள் வசூலாகி வந்தன என்றால் அவை முஸ்லிம்களின் தேவைக்குப் பிறகும் எஞ்சி விட்டன.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 257 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த வெற்றிகள் மற்றும் நற்செய்திகளுக்கு மத்தியிலேயே ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையும் வெற்றியுடன் மதீனாவிற்கு திரும்பி வந்தது. ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்கள் திரும்பி வந்த பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவர்களை மதீனாவில் தமது உதவியாளராக நியமனம் செய்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸினான் ஸம்ரி அவர்களை தமது உதவியாளராக நியமித்தார்கள் என்றும் கூறப்படுகின்றது. நீங்கள் முதலில் ஓய்வெடுங்கள். உங்களது சவாரிகளில் விலங்குகளையும் மூச்சு வாங்க விடுங்கள் என்று அன்னாருடனும், அன்னாருடைய படையுடனும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) கூறினார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சுயமே அந்த மக்களுடன் சவாரி செய்து துல்கஸ்ஸா எனும் இடத்திற்கு புறப்பட்டார்கள். ஆனால் முஸ்லிம்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களே! இறைவனின் பெயரால் உங்களிடம் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். தாங்கள் இந்த போரில் செல்ல வேண்டாம். ஏனென்றால் துரதிஷ்டவசமாக ஒருவேளை தாங்களுக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டால் முழு அமைப்பும் சிதறுண்டு விடும். தாங்கள் வேறொருவரை இந்த பணிக்காக அனுப்பி வையுங்கள். ஏனென்றால் அவருக்கு ஏதாவது ஆனாலும் கூட தாங்கள் வேறொருவரை அவருடைய இடத்தில் நியமிக்க முடியும் என்று கூறினர்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் ஒருபோதும் அவ்வாறு செய்ய மாட்டேன். நான் உங்களின் துன்பத்தை அகற்றுவதற்காக எனது உயிரை தந்து விடுவேன் என்று கூறினார்கள்.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 253, 256 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய ஸய்யிதுனா அபூபக்ர் சித்தீக் (ரலி) கி ஷக்ஸிய்யத் அவ்ர் கார்நாமே என்ற நூல் பக்கம் 282 – பாகிஸ்தானிலுள்ள அல்ஃபுர்கான் கான் கட் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

பின்னர் ரபஸா வாசிகள் மீது நடந்த தாக்குதலைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விட்டு துகிஸா மற்றும் துல்கஸ்ஸாவிற்கு சென்று விட்டார்கள். துல்கஸ்ஸா என்பது மதீனாவிலிருந்து 40 மைல் தொலைவிலுள்ள ஓர் இடமாகும். நுஃமான் (ரலி), ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஷுஹைப் (ரலி) ஆகியோர் தத்தமது இடத்தில் இருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அப்ரத் என்ற இடத்தில் ரபஸ வாசிகளை சுற்றி வளைத்து விட்டார்கள். கடுமையான போர் நிகழ்ந்தது. இறுதியில் அல்லாஹ், முர்ரா சஃபா மற்றும் ஹப்ஸ் கோத்திரத்தின் தலைவர்களாக இருந்த ஹாரிஸ் மற்றும் அவ்ஃபிற்கு தோல்வியை வழங்கினான். மேலும் குதைப் உயிருடன் பிடிக்கப்பட்டான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சில நாட்கள் அப்ரகில் தங்கி இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் அப்ரகின் பூமியில் முஸ்லிம்களின் குதிரைகளுக்கான லாயத்தை கட்டினார்கள். இந்தப் போரில் பனூ ஹபஸ் மற்றும் பனூ சுப்யான் தோல்வியடைந்து துலைஹாவிடம் சென்று இணைந்து கொண்டார்கள். அந்த நேரத்தில் துலைஹா சமீராவிலிருந்து சென்று புஸாஹா என்ற இடத்தை அடைந்து தங்கி இருந்தான். புஸாஹா என்பது பனூ அஸத் கோத்திரத்தின் நீரூற்றின் பெயராகும். இங்கு துலைஹா அஸதியுடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் பெரும் போர் நிகழ்ந்தது.

(தாரீக் தபரி தொகுதி 2 பக்கம் 256 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 484, 485 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பின்னர் ஒரு நூலாசிரியர் தோல்வியுற்ற கோத்திரங்களின் நிலைகள் தொடர்பாக இவ்வாறு எழுதுகின்றார்: அப்ஸ், துபியான், கத்ஃபான், பனிபக்ர் மற்றும் மதீனாவிற்கு அருகில் வசிக்கக் கூடிய ஏனைய கிளர்ச்சி கோத்திரங்கள் தமது பிடிவாதம் மற்றும் கிளர்ச்சியிலிருந்து விலகி விடுவது அவர்களுக்கு உகந்ததாக இருந்தது. மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு முழுமையாக கட்டுப்பட்டு இஸ்லாமிய கட்டளைகளை மேற்கொள்வதாக ஒப்புக் கொள்வதும், முஸ்லிம்களுடன் இணைந்து முர்தத்களுக்கு எதிராக போரிடுவதும் அவர்களுக்கு உகந்ததாக இருந்தது. அறிவின் தேட்டமும் அதுவாகவே இருந்தது. சம்பவங்களும் அதனையே ஆதரிக்கின்றன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மூலமாக அவர்களின் வலிமை குன்றி இருந்தது. ரோமின் எல்லைகளில் கிடைத்த வெற்றியின் காரணமாக மதீனாவாசிகளின் திகில் நிலைபெற்று விட்டது. முஸ்லிம்களின் ஆற்றலும், வலிமையும் அதிகரித்திருந்தது. பத்ர் போர் மற்றும் ஆரம்ப கால போர்களின் நாட்களில் இருந்த பலவீனமான நிலையில் முஸ்லிம்கள் தற்போது இருக்கவில்லை. தற்போது மக்காவும் கூட அவர்களுடன் இருந்தது. தாயிஃப் நகரமும் அவர்களுடன் இருந்தது. இந்த இரண்டு நகரங்களின் மேன்மையையும் அனைத்து அரபு வாசிகளும் ஒப்புக் கொண்டிருந்தனர். பின்னர் இந்த கோத்திரங்களுக்கு மத்தியில் எந்நிலையிலும் கிளர்ச்சியாளர்களால் தங்களுடன் இணைத்துக் கொள்ளவே முடியாத முஸ்லிம்களின் எண்ணிக்கையும் மிகுதியாக இருந்தது.

இவ்வாறு அவர்களின் நிலை மிக மிக பலவீனமாக ஆகி விட்டது. ஆனால் அதற்குப் பின்பும் முஸ்லிம்களின் மீதான பகைமை அவர்களின் கண்களை குருடாக்கி இருந்தது. நன்மையை உணரக் கூடிய தன்மை உள்ளங்களிலிருந்து மறைந்திருந்தது. அவர்கள் தமது நாடுகளை விட்டு விட்டனர். பனீ அஸத் கோத்திரத்தின் பொய் நபித்துவ வாதியான துலைஹா பின் குவைலத் உடன் சென்று இணைந்து கொண்டனர். அவர்களுக்கு மத்தியில் இருந்த முஸ்லிம்களால் அவர்களை அவர்களின் எண்ணங்களிலிருந்து விலக்கி வைக்க முடியவில்லை. அந்த மக்கள் சென்றடைந்ததால் துலைஹா மற்றும் முஸைலமாவின் ஆற்றல் மற்றும் வலிமை அதிகரித்து விட்டது. ஏமன் நாட்டில் கிளர்ச்சியின் ஜுவாலைகள் மிக வேகமாக கொளுந்து விட்டு எரியத் தொடங்கின.

(அப்துல்லாஹ் மதனி அவர்கள் எழுதிய ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) கே ஃபேஸ்லே என்ற நூல் பக்கம் 173, 174 – லாஹூரிலுள்ள முஷ்தாக் கார்னரில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் அந்த மக்கள் கிளர்ச்சி செய்து போர் புரிந்தனர் என்பதை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும். ஒருவரின் வாதத்தால் இந்தப் போர் நிகழ்ந்திருக்கவில்லை. கிளர்ச்சி செய்ததற்கான தண்டனை வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவர்கள் செய்த போரின் மூலமாக பதில் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது.

ஸகாத் கொடுக்க மறுத்தவர்கள் மீது பெற்ற வெற்றி மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீரம், உறுதி ஆகியவற்றை குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மசூத் (ரலி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்: அன்னாரின் ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகின்றது. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு நாங்கள் எந்த இடத்தில் நின்று கொண்டிருந்தோம் என்றால் ஒருவேளை அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மூலமாக எங்களுக்கு உதவி செய்யவில்லையென்றால் எங்களது அழிவு உறுதியானதாக இருந்தது. முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரின் ஒன்றுபட்ட கருத்து என்னவாக இருந்ததென்றால், நாம் ஸகாத் ஒட்டகங்களுக்காக (ஸகாத் கொடுக்க மறுத்ததற்காக) மற்றவர்களுடன் போர் புரிய கூடாது. அல்லாஹ்வின் வணக்கத்தில் மும்முரமாகி விட வேண்டும். எந்த அளவுக்கென்றால், நமக்கு முழுமையாக வெற்றி கிடைத்து விடும் வரை அவ்வாறே செய்ய வேண்டும். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸகாத் கொடுக்க மறுத்தவர்களுடன் போர் புரிவதற்கு உறுதி கொண்டிருந்தார்கள். அன்னார் (ரலி) மறுப்பவர்களுக்கு முன்னால் இரண்டு விஷயங்களை மட்டுமே முன் வைத்தார்கள். மூன்றாவது விஷயத்தை முன் வைக்கவில்லை.

முதல் விஷயம் என்னவென்றால், (ஸகாத் கொடுக்க மறுப்பவர்களாகிய) அவர்கள் தமது இழிவையும், இழி நிலையையும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஒருவேளை இது ஏற்புடையதில்லை என்றால் நாடு துறக்க வேண்டும் அல்லது போர் புரிவதற்கு தயாராகி விட வேண்டும். தமது இழிவை ஒப்புக் கொள்வதன் பொருள் என்னவாக இருந்ததென்றால், அவர்களில் கொலை செய்யப்படுபவர்கள் நரகவாசிகள் என்றும், நம்மவர்கள் சொர்க்கவாசிகள் என்றும் ஒப்புக் கொள்ள வேண்டும். மேலும் நம்மவர்களில் கொலையுண்டவர்களின் கொலைக்கு ஈடாக ஈட்டுத் தொகையை வழங்க வேண்டும். அவர்களிடமிருந்து பெறப்பட்ட போர் செல்வங்களை திரும்ப கொடுக்குமாறு நம்மிடம் வேண்டக் கூடாது. ஆயினும் நம்மிடமிருந்து அவர்கள் பெற்ற செல்வங்களை நமக்கு அவர்கள் திரும்ப கொடுத்து விட வேண்டும். நாடு துறப்பதற்கான தண்டனையை அனுபவிப்பதன் பொருள் என்னவென்றால், தோல்வியுற்ற பிறகு தமது பகுதிகளிலிருந்து வெறியேறி விட வேண்டும். மேலும் தொலைதூர இடங்களுக்கு சென்று வாழ்க்கையை கழிக்க வேண்டும்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) என்ற நூல் பக்கம் 118 – லாஹூரிலுள்ள ஷிர்கத் அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு சில அரபு கோத்திரங்கள் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மக்களுக்கெதிராக போர் புரிவதற்கு தயாராகி விட்டார்கள். அந்த நேரத்தின் நிலைமை எவ்வாறு மோசமானதாக இருந்ததென்றால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் போன்ற மனிதர்கள் அந்த மக்களுடன் மென்மையாக நடந்து கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறினர். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதற்கு பதில் கொடுத்தார்கள்.

அந்த பதில் இதற்கு முன்பும் எடுத்துரைக்கப்பட்டு விட்டது. அதாவது அபூகுஹாஃபாவின் மகனுக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் வழங்கிய அந்த கட்டளையை ரத்து செய்வதற்கு என்ன தகுதி உள்ளது. இறைவன் மீது ஆணையாக! இந்த மக்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் ஒட்டகத்தின் கால்களை கட்டுவதற்கு பயன்படும் ஒரு கயிற்றை ஸகாதாக கொடுத்திருந்தால் நான் அந்த கயிற்றையும் அவிடமிருந்து வாங்கியே தீருவேன். அவர்கள் ஸகாத் செலுத்தாத வரை ஒருபோதும் அமைதியாக இருக்க மாட்டேன். இந்த விவகாரத்தில் நீங்கள் எனக்கு ஆதரவாக இல்லையென்றால், நிச்சயமாக நீங்கள் ஆதரவு வழங்க வேண்டாம். நான் தனியாகவே அவர்களை எதிர்கொள்வேன் என்று அன்னார் (ரலி) அவர்கள் தமது தோழர்களிடம் கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள்! அன்னார் (ரலி) அவர்கள் எந்த அளவிற்கு இறைத்தூதர் (ஸல்) அவர்களை பின்பற்றினார்கள். மிகவும் அபாயகரமான சூழல் நிலவுகிறது. போருக்கு எதிராக பெரும் சஹாபிகள் ஆலோசனை வழங்குகின்றார்கள். அதன் பின்னரும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கட்டளையை முழுமை செய்வதற்காக எல்லா வகையான அபாயங்களையும் எதிர்கொள்வதற்காக அன்னார் (ரலி) அவர்கள் ஆயத்தமாகி விட்டார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 8 பக்கம் 108, 109)

பின்னர் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மற்றோர் இடத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

அன்னார் (ரலி) கூறினார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் மார்க்கத்திலிருந்து விலகியவர்களின் குழப்பம் பரவிவிட்டபோது கிராமங்களில் மட்டுமே ஜுமாஅத்தான தொழுகை நிறைவேற்றப்பட்டு வந்தது. படையும் சிரியாவிற்கு அனுப்பப்பட்டு இருந்தது. அவ்வாறிருந்தும் அன்னார் (ரலி) அவர்கள் ஸகாத் கொடுக்க வேண்டியவர்களின் பெயரில் இந்த கட்டளையை அனுப்பி வைத்தார்கள். அதாவது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் ஒருவர் கயிறை ஸகாத்தாக கொடுத்து வந்து தற்போது அவர் அதனை கொடுக்கவில்லையென்றால் நான் அதனை அவரிடமிருந்து வாளின் அழுத்தத்தால் பெறுவேன் என்று கூறினார்கள். தற்போது ஸகாதின் மீது அழுத்தம் கொடுப்பது காலத்திற்கு உகந்ததல்ல என்று ஹஸ்ரத் உமர் (ரலி) போன்ற பெரும் வீரர்கள் ஆலோசனை கூறினர். ஆனால் அன்னார் (ரலி) அவர்கள் அன்னாரது எந்த கூற்றையும் ஏற்கவில்லை. இதிலிருந்து ஸகாத் கொடுப்பது எந்த அளவிற்கு அவசியமானது என்பது தெரிய வருகின்றது.

(மதாரிஜுத் தக்வா, அன்வாருல் உலூம் தொகுதி 1 பக்கம் 382, 383)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறிய இந்த விஷயம் அன்னார் ஒரு சொற்பொழிவிற்கு மத்தியில் கூறிய விஷயமாக இருந்தது. அதில் இறையச்சத்தின் படித்தரங்களையும் எடுத்துரைத்திருந்தார்கள். தக்வாவிற்கு என்னென்ன படித்தரங்கள் உள்ளன? ஸகாதிற்கு எவ்வளவு முக்கியத்துவம் உள்ளது? தக்வாவின்படி நடப்பவர்களுக்கு இது அவசியமாகும் என்ற விஷயங்களை அன்னார் (ரலி) கூறினார்கள். ஸகாத் எவ்வளவு அவசியமானது என்பதையும், அதனை தொடர்ந்து கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதை அஹ்மதிகள் நினைவிற் கொள்ள வேண்டும் என்ற விஷயத்தையும் அன்னார் (ரலி) அவர்கள் அங்கு கூறி வந்தார்கள்.

(மதாரிஜுத் தக்வா, அன்வாருல் உலூம் தொகுதி 1 பக்கம் 383)

பின்னர் மற்றோர் இடத்தில் ஸகாத் விவகாரத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் ஸகாத் ஆகும். ஆனால் மக்கள் அதனை புரிவதில்லை. இறைவன் தொழுகைக்குப் பிறகு அதற்கு கட்டளை வழங்கியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிராகரிப்பாளர்களுடன் நடந்து கொண்ட அதே வழிமுறையையே ஸகாத் கொடுக்காத நபர்களுடன் நான் மேற்கொள்வேன். அதுபோன்ற மக்களில் ஆண்களை நான் அடிமையாக்கிக் கொள்வேன். மேலும் அவர்களின் பெண்களை அடிமைப் பெண்களாக்கி விடுவேன் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். மக்கா, மதீனா மற்றும் மற்றுமொறு நகரத்தை தவிர அரபின் ஏனைய அனைத்து பகுதிகளும் முர்ததாகி விட்டன. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அப்படிப்பட்ட சோதனை வந்தது. எந்த மக்கள் ஸகாத் கொடுக்க மறுக்கின்றர்களோ அவர்களிடம் உடன்படிக்கை செய்து கொள்வோம் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) போன்ற மக்கள் கூறினர்.

முதலில் மற்ற முர்தத்களுடன் போரிடுவோம். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக இவர்களிடம் சீர்திருத்தம் ஏற்பட்டு விடும் என்று அவர்கள் கூறினார்கள். பொய் நபித்துவவாதிகளுக்கு முதலில் முடிவு கட்டப்பட வேண்டும். ஏனென்றால் அவர்களின் குழப்பம் கடுமையானதாக உள்ளது என்றும் கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: மக்கள் ஆட்டுக் குட்டியையோ அல்லது ஒட்டகத்தின் கால்களை கட்டுகின்ற கயிற்றுக்கு சமமான பொருளை ஸகாத் செல்வத்திலிருந்து வழங்காவிட்டால் அவர்களுடன் நான் போர் புரிவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அவர்கள் கொடுத்து வந்த ஸகாத்தை கொடுக்காவிட்டால் நான் அவர்களுடன் போரிடுவேன். நீங்கள் என்னை விட்டு விட்டு சென்றாலும், காட்டு விலங்குகள் முர்தத்களுடன் இணைந்து கொண்டு தாக்குதல் தொடுத்தாலும் கூட நான் அவர்களுடன் கடுமையாக போரிடுவேன்.

(பரகாத்தே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 2 பக்கம் 222, 223)

ஷரீஅத்தை நிலைநாட்டுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்பதும், காலத்தின் கலீஃபா உண்மையான முயற்சி செய்கின்றார் என்பதும் கிலாஃபத்தின் பரக்கத்துகளில் ஒன்றாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் ஒரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்: மக்கள் மற்றுமொரு ஆட்சேபனையை செய்கின்றனர். ஆனால் இறைவன் அதற்குரிய பதிலை 1300 ஆண்டுகளுக்கு முன்பாகவே வழங்கி விட்டான்.

شَاوِرْهُمْ فِي الْأَمْرِ என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. இதில் கிலாஃபத் எங்கிருந்து வந்து விட்டது. கிலாஃபத்திற்கு இந்த கட்டளை பொருந்தாது என்று ஆட்சேபனை செய்யக் கூடிய மக்கள் கூறுகின்றனர். ஆனால் இந்த மக்கள் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது ஸகாத் தொடர்பாக ஆட்சேபனை செய்யப்பட்டபோது அதுவும் கூட இதே வடிவத்தை கொண்டிருந்தது. அதாவது خُذْ مِنْ أَمْوَالِهِمْ صَدَقَةً என்பது இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட கட்டளையாகும். ஆம்! இந்த கட்டளை இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்கே வந்தது. தற்போது அவர்கள் இல்லை. எனவே அந்த தர்மங்களை வசூல் செய்வதற்கு வேறு எவருக்கும் உரிமையில்லை. வாங்குவதற்கு எவருக்கு கட்டளை இடப்பட்டதோ அவர் மரணித்து விட்டார் என்று எதிரிகள் கூறினர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மக்களிடம், தற்போது என்னிடமே அது கூறப்பட்டுள்ளது என்று கூறினார்கள். அதாவது தற்போது அபூபக்ர் ஆகிய என்னிடம் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்து விட்டார்கள். ஆனால் ஷரீஅத் நிலைபெற்றுள்ளது. எனவே தற்போது காலத்தின் கலீஃபா அந்த இடத்தில் இருக்கின்றார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் அந்த சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது அன்னார் (ரலி) கூறினார்கள்: இதே வடிவத்தை மேற்கொண்டவாறு என் மீது ஆட்சேபனை செய்யக் கூடியவர்களிடம் நான் கூறுகின்றேன். தற்போது நானே அந்த இடத்தில் உள்ளேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த பதில் உண்மையானதாக இருந்தது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வழங்கிய அந்த பதில் அந்த நேரத்தில் உண்மையானதாக இருந்தது. எனவே நான் கூறுகின்ற இந்த விஷயமும் சரியானதாக உள்ளது. இன்று என்னிடம் கூறப்பட்டுள்ளது. இந்த விதிமுறையே எப்போதும் கிலாஃபத்துடன் இருக்கும். இது நினைவிற் கொள்ள வேண்டிய விஷயமாகும்.

பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருவேளை உங்களது ஆட்சேபனை சரி என்றால் திருக்குர்ஆனிலிருந்து அது தொடர்பான ஏராளமான கட்டளைகளை வெளியேற்றி விட நேரிடும். அது மிகத் தெளிவான வழிகேடாகும்.

(மன்ஸபே கிலாஃபத், அன்வாருல் உலூம் தொகுதி 2 பக்கம் 59, 60)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கிலாஃபத் பதவி என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கும்போது இந்த விஷயங்களை அன்னார் (ரலி) எடுத்துரைத்துக் கொண்டிருந்தார்கள்.

பின்னர் மற்றோர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்தபோது ஏராளமான பாமர முஸ்லிம்கள் முர்ததாகி விட்டனர். வரலாற்றில் இவ்வாறு வருகின்றது. அதாவது பள்ளிவாசல்களில் ஜமாஅத்தாக தொழுகை நடைபெற்று வந்த இடங்கள் மூன்று இடங்களே எஞ்சியிருந்தன. அதேபோன்று நாட்டின் பெரும்பாலான மக்கள் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு எங்களிடமிருந்து ஸகாத் கேட்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை என்று அவர்கள் கூறி வந்தனர். இந்த தாக்கம் முழு அரேபியாவிலும் பரவியது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அதுபோன்ற மக்களுடன் கடினம் காட்ட விரும்பினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஏனைய சஹாபிகள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் வந்தார்கள். ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று இது மிகக் கடினமான தருணமாகும். இந்த நேரத்தில் சிறிதளவு கவனமின்மை கூட மாபெரும் பாதிப்பிற்கு காரணியாகி விடக் கூடும். எனவே எங்களது ஆலோசனை என்னவென்றால், இவ்வளவு பெரிய எதிரியுடன் போரிட வேண்டாம். ஸகாத் கொடுக்க விரும்பாத மக்களிடம் மென்மையுடன் நடந்து கொள்ளலாம் என்று அவர்கள் கூறினர்.

அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: உங்களில் எவர் அஞ்சுகின்றாரோ அவர் எங்கு செல்ல விரும்புகின்றாரோ சென்று கொள்ளட்டும். இறைவன் மீது ஆணையாக! உங்களில் ஒருவர் கூட எனக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றாலும் நான் தனியாகவே எதிரியுடன் போரிடுவேன். ஒருவேளை எதிரி மதீனாவிற்குள் நுழைந்து விட்டாலும், எனது அன்பர்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் கொன்று விட்டாலும், பெண்களின் பிணங்களை மதீனாவின் தெருக்களில் நாய்கள் இழுத்துக் கொண்டு சென்றாலும் அப்போதும் நான் அவர்களுடன் போரிடுவேன். ஸகாத்தாக ஒட்டகத்தின் கால்களை கட்டக் கூடிய கயிறை இதற்கு முன்னர் அவர்கள் ஸகாத்தாக கொடுத்து வந்தனர். அதனை இப்போது கொடுக்காத வரை நான் அவர்களுடன் போரிடுவேன்.

எனவே அன்னார் அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எதிரிகளின் தீங்குகளை மிக தைரியமாக எதிர் கொண்டார்கள். மேலும் இறுதியில் வெற்றி பெற்று விட்டார்கள். இந்தப் பணியை, தான் தான் செய்ய வேண்டும் என்பதை அன்னார் புரிந்திருந்தார்கள். எனவே வெற்றி பெற்றார்கள். அதன் காரணமாக, உங்களில் எவரும் எனக்கு ஒத்துழைப்பு வழங்கவிட்டாலும் நான் தனியாகவே எதிரியை எதிர்கொள்வேன். எந்த அளவுக்கென்றால், எனது உயிர் இறை வழியில் அர்ப்பணமாகி விடும் என்று அன்னார் (ரலி) தமக்கு ஆலோசனை வழங்கக் கூடிய சஹாபிகளிடம் கூறி விட்டார்கள்.

எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த சமுதாயத்திடம் இந்த உறுதி உருவாகி விடுமோ அது எல்லா மைதானத்திலும் வெற்றி பெற்று விடுகின்றது. எதிரி ஒருபோதும் அந்த சமுதாயத்திற்கு முன்னால் நிற்க முடியாது.

(கம்வி தர்கி கே தோ அஹம் உஸூல், அன்வாருல் உலூம் தொகுதி 19 பக்கம் 75, 76)

இது (ஒரு) சமுதாயத்தின் முன்னேற்றத்தின் இரகசியமாகும். இதனை எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும்.

அடுத்து மற்றொரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) கூறினார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஸகாத் விவகாரத்தில் கருத்து வேறுபாட்டின் காரணமாக அரபு நாட்டின் ஆயிரக்கணக்கான மக்கள் முர்ததாகி விட்டனர். முஸைலமா மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்தான். அப்போது அந்த நேரத்தில் கலீஃபாவாக இருந்த ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு முஸைலமா ஒரு லட்சம் படையுடன் தாக்குதல் தொடுக்கின்றான் என்ற தகவல் கிடைத்தது. அந்த நேரம் சில மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு இவ்வாறு ஆலோசனை வழங்கினார்கள். அதாவது இந்த நேரம் நாம் ஒரு அபாயகரமான காலகட்டத்தை கடந்து கொண்டிருக்கின்றோம். ஸகாத் விவகாரத்தில் கருத்து வேறுபாட்டின் காரணாக மக்கள் மார்க்கத்தை விட்டு விலகி வருகின்றனர். மற்றொரு பக்கம் முஸைலமா ஒரு பெரும் படையுடன் தாக்குதல் தொடுத்துள்ளான். எனவே இந்த நிலைமைகளை கருத்தில் கொண்டு தாங்கள் ஸகாத் கொடுக்கும்படி கூறுவதை கைவிட்டு விட்டு அந்த மக்களுடன் சமாதானம் செய்து கொள்வதே தற்போதைய நேரத்திற்கு உகந்த செயலாகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த அபாயங்களை சற்றும் பொருட்படுத்தவில்லை. அதனை பொருட்படுத்தாமல் ஆலோசனை கூறக் கூடியவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு நேர் மாற்றமான விஷயத்தை என்னை ஒப்புக் கொள்ளும்படி செய்ய விரும்புகின்றீர்களா? ஸகாத்தின் கட்டளை இறைவன் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் புறமிருந்து வழங்கப்பட்டதாகும். எனவே இறைவன் மற்றும்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Naib Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

அவனது தூதர் (ஸல்) அவர்களின் கட்டளையை பாதுகாப்பதற்காக சாத்தியமான எல்லா முயற்சிகளையும் செய்வது எனது கடமை ஆகும். அதன் பின்னரும் சமாதானம் செய்து கொள்வதே தற்போதைய நிலைமையின் தேட்டமாகும் என்று சஹாபிகள் கூறினர்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் போரிட விரும்பவில்லையென்றால் மேலும் எதிரியை எதிர் கொள்ள முடியாதென்றால் நீங்கள் சென்று விடுங்கள். உங்களது வீடுகளில் சென்று அமர்ந்து கொள்ளுங்கள். இறைவன் மீது ஆணையாக! எதிரி ஸகாத்தாக கொடுக்க வேண்டிய ஒட்டகத்தின் கால்களை கட்டக் கூடிய கயிறை கொடுத்து விடாத வரை நான் அவனுடன் தனியாகவே போரிடுவேன். மேலும் அந்த மக்களை ஸகாத் கொடுப்பதை ஏற்றுக் கொள்ளச் செய்யாத வரை நான் அவர்களுடன் ஒருபோதும் சமாதானம் செய்து கொள்ள மாட்டேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: உண்மையான ஈமானின் அடையாளம் இதுவே ஆகும்.

(ஹமாரே ஸிம்மா தமாம் துன்யா கே ஃபதஹ் கர்னேகா காம் ஹே, அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 458)

எனவே இதுவே ஈமான் ஆகும். நம்மிடம் அந்த ஈமான் இருந்தால் அந்நிலையில் நாம் உலகில் இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை சென்றடையச் செய்ய முடியும். மேலும் இன்ஷா அல்லாஹ் நாம் வெற்றி பெறுவோம்.

பின்னர் மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அரபு கோத்திரங்கள் கிளர்ச்சி செய்தன. அந்த கோத்திரங்கள் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டன. இறைத்தூதர் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எவருக்கும் ஸகாத் வாங்குவதற்கு அதிகாரம் வழங்கவில்லை என்றே சான்று கொடுத்து வந்தனர்.

இறைவன் கூறுகின்றான்: அதாவது அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி கூறுகின்றான்: முஹம்மதே! நீர் அவர்களது செல்வத்தில் சில பகுதியை ஸகாத்தாக பெற்றுக் கொள்வீராக. எனவே இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குப் பிறகு வேறு எவருக்கும் ஸகாத் பெறுவதற்கு அதிகாரம் உள்ளது என்று வேறு எங்கும் கூறப்படவில்லை. என்று அவர்கள் கூறினர். ஆனால் முஸ்லிம்கள் அவர்களின் இந்த சான்றை ஒப்புக் கொள்ளவில்லை. ஏனென்றால் அந்த இடத்தில் இறைத்தூதர் (ஸல்) அவர்களை குறிப்பாக சுட்டிக்காட்டி கூறப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் எந்த மக்கள் அந்த நேரத்தில் முர்தத் ஆகினார்களோ அவர்களின் மாபெரும் சான்று இதுவாகவே இருந்தது. அதாவது ஸகாத் வாங்குவதற்கான அதிகாரம் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு மட்டுமே உள்ளது. அன்னாரைத் தவிர்த்து வேறு எவருக்கும் அதற்கான உரிமை இல்லை. அமைப்புடன் தொடர்புடைய கட்டளைகள் எப்போதும் செயல்படத்தக்கதாக இருப்பதில்லை. மாறாக, இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் அந்த கட்டளைகள் சிறப்புடையதாக இருக்கின்றன என்று அவர்கள் கருதினர். இதுவே அவர்களின் தடுமாற்றத்திற்கு காரணியாக இருந்தது.

ஆனால் அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த எண்ணம் முற்றிலும் தவறாகும். அசல் விஷயம் இதுவே ஆகும். அதாவது எவ்வாறு தொழுகை, நோன்பு போன்ற கட்டளைகள் இறைத்தூதர் (ஸல்) அவர்களுடன் முடிந்து விடவில்லையோ அதேபோன்று சமுதாயம் அல்லது தேசத்தின் அமைப்புடன் தொடர்புடைய கட்டளைகளும் அன்னாருடைய மரணத்துடன் முடிந்து விடவில்லை. ஜமாஅத்தான தொழுகை ஒரு கூட்டு இறைவணக்கம் ஆகும். இந்த கட்டளைகள் தொடர்பாகவும் அவசியம் என்னவென்றால், எப்போதும் முஸ்லிம்களில் அன்னாரின் பிரதிநிதிகள் மூலமாக அந்த கட்டளைகளின் மீது அமல் செய்யப்பட்டு வந்துள்ளது.

(கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம் தொகுதி 15 பக்கம் 30, 31)

பின்னர் மற்றொரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அதாவது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மரணமடைந்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனபோது முழு அரேபியாவும் முர்த்தாகி விட்டது. மக்கா, மதீனா மற்றும் ஒரு சிறிய ஊர்வாசிகளைத் தவிர மற்ற அனைவரும் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டனர்.

خُذۡ مِنۡ اَمۡوَالِہِمۡ صَدَقَۃً

அவர்களின் செல்வங்களிலிருந்து சதகாவை பெறுவீராக என்று அல்லாஹ் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடமே கூறி இருந்தான். எனவே எங்களிடமிருந்து ஸகாத் வசூல் செய்வதற்கு வேறு எவருக்கும் அதிகாரம் இல்லை என்று அந்த மக்கள் கூறினர்.

சுருக்கமாக, முழு அரேபியாவும் முர்த்தாகி விட்டது. மேலும் அவர்கள் போருக்காக தயாராகி விட்டார்கள். அவர்கள், முர்தத் மட்டும் ஆகிவிடவில்லை. அதாவது மார்க்கத்தை மட்டும் புறக்கணிக்கவில்லை. மாறாக, போர் புரிவதற்கும் தயாராகி விட்டார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் இஸ்லாம் பலவீனமாக இருந்தபோதிலும் அரபு கோத்திரங்கள் தனித்தனியாக தாக்குதல் தொடுத்தன. ஒருபோதும் ஒரு கூட்டமாக தாக்குதல் தொடுக்கவில்லை.

அஹ்ஸாப் போரின் சந்தர்ப்பத்தில் நிராகரிப்பாளர்களின் படை ஒட்டுமொத்த அளவில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்த அந்த நேரம் வரை இஸ்லாம் மிக அதிக வலிமை பெற்றிருந்தது. எதிர்காலத்தில் எந்த தாக்குதலுக்கும் அச்சமே இல்லாத அளவிற்கு அவர்களுக்கு அதிக வலிமை கிடைத்திருக்கவில்லையென்றாலும் அந்த நேரத்தில் இஸ்லாம் ஓர் அளவிற்கு வலிமை பெற்றிருந்தது. பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை வெற்றி கொள்வதற்கு சென்றபோது அந்த நேரத்தில் சில கோத்திரங்களும் அன்னார் (ஸல்) அவர்களின் உதவிக்காக தயாராகின. இதுபோன்று முழு நாட்டின் மீதும் ஆதிக்கம் செலுத்தும் அளவிற்கு அவர்கள் ஆதிக்கம் பெற்று விடக் கூடாது என்பதற்காக இறைவன் படிப்படியாக எதிரிகளிடம் உத்வேகத்தை ஏற்படுத்தி இருந்தான் என்று அவர்கள் கருதினர்.

ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் காலத்தில் ஒரே அடியாக முழு அரபு தேசமும் முர்த்தாகி விட்டது. மக்கா, மதீனா மற்றும் ஒரு சிறிய ஊர் மட்டுமே எஞ்சியிருந்தது. ஏனைய அனைத்து ஊர்களின் மக்களும் ஸகாத் கொடுக்க மறுத்து விட்டனர். மேலும் அவர்கள் படைகளை திரட்டிக் கொண்டு போரிடுவதற்காக புறப்பட்டு விட்டனர். ஸகாத் கொடுக்க மட்டும் அவர்கள் மறுக்கவில்லை. மாறாக, படைகளை திரட்டிக் கொண்டு போரிடுவதற்காக புறப்பட்டார்கள். சில இடங்களில் அவர்களிடம் ஒரு லட்சம் படை கூட இருந்தது. ஆனால் இங்கு வெறும் 10,000 நபர்களைக் கொண்ட ஒரு படை மட்டுமே இருந்தது. அந்தப் படையும் சிரியாவிற்கு சென்று கொண்டிருந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தமது மரணத்திற்கு அருகில் ரோமானிய பகுதிகளில் தாக்குதல் நடத்துவதற்காக அந்தப் படையை தயார் செய்திருந்தார்கள். மேலும் உஸாமா (ரலி) அவர்களை அதன் அதிகாரியாக நியமித்திருந்தார்கள். அந்தப் படையை தவிர்த்து எஞ்சியிருந்த மக்கள் ஒன்று பலவீனமானவர்களாக இருந்தார்கள் அல்லது முதியவர்களாக இருந்தனர் அல்லது விரல் விட்டு எண்ணக் கூடிய சில இளைஞர்களே எஞ்சியிருந்தனர்.

இந்த நிலைமைகளைப் பார்த்து சஹாபிகள் இவ்வாறு எண்ணினர். அதாவது ஒருவேளை இதுபோன்ற கிளர்ச்சியின் நேரத்தில் ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையும் புறப்பட்டுச் சென்று விட்டால் பின்னர் மதீனாவின் பாதுகாப்பிற்கு எந்த ஏற்பாடும் செய்ய முடியாது. எனவே பெரும் சஹாபிகளின் அந்தக் குழு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சமூகத்தில் ஆஜரானது. ஏற்கனவே இந்த விஷயம் எடுத்துரைக்கப்பட்டு விட்டது.

அந்தக் குழு இவ்வாறு கூறியது: சிறிது காலத்திற்காக மட்டும் இந்தப் படையை தடுத்து நிறுத்திக் கொள்ளுங்கள். கிளர்ச்சி அகன்றுவிடும்போது பின்னர் நிச்சயமாக இதை அனுப்பி விடுங்கள். இந்த நேரத்தில் இதனை அனுப்புவது அபாயத்திற்குரியதாகும்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் கோபமான நிலையில் இவ்வாறு கூறினார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் எந்தப் படையை புறப்படுவதற்கு கட்டளையிட்டிருந்தார்களோ, அதை தடுத்து நிறுத்துவதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு அபூகுஹாஃபாவின் மகன் தனது முதல் பணியாக செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகின்றீர்களா?

எவ்வாறிருப்பினும் அன்னார் (ரலி) கூறினார்கள்: இந்தப் படை புறப்பட்டுச் செல்லும். எந்தப் படையை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புறப்படுவதற்கு கட்டளையிட்டிருந்தார்களோ அதனை நான்

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Sec. Waqf-e-Jadid, Melapalayam)

நிச்சயம் அனுப்பி வைப்பேன். நீங்கள் எதிரியின் படைகளைக் கண்டு அஞ்சுகின்றீர்கள் என்றால் நிச்சயமாக என்னை விட்டு விலகி விடுங்கள். நான் தனியாக அனைத்து எதிரிகளையும் எதிர்கொள்வேன்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த விஷயம் يَعْبُدُوْنَنِيْ لَا يُشْرِكُوْنَ بِيْ شَيْئًا (என்னையே அவர்கள் வணங்குவார்கள். அவர்கள் எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள்) என்ற வசனத்தை உண்மைப்படுத்துவதற்கு மாபெரும் சான்றாகும். அதாவது கிலாஃபத்தில் நிலைநிற்கக் கூடியவர்கள் அல்லது கிலாஃபத்துடன் இருக்கக் கூடிய நம்பிக்கையாளர்கள் என்னையே வணங்குவார்கள். எனக்கு வேறு எவரையும் இணையாக்க மாட்டார்கள். கிலாஃபத் அமைப்புடன் தொடர்கின்ற நிலை இதுவாகும். எதிர்காலத்திலும் இந்த நிலையே தொடரும்.

அடுத்து அன்னார் (ரலி) கூறகின்றார்கள்: இரண்டாவது கேள்வி ஸகாத் பற்றியதாகும். சஹாபிகள் இவ்வாறு கூறினர். ஒருவேளை உங்களால் படையை அனுப்புவதை நிறுத்த முடியாதென்றால் பின்னர் அந்த மக்களுடன் தற்காலிக உடன்படிக்கை செய்து கொள்ளுங்கள். நாங்கள் இந்த வருடம் உங்களிடமிருந்து ஸகாத் பெற மாட்டோம் என்றாவது கூறி விடுங்கள். அதற்குள் அவர்களின் உத்வேகம் தணிந்து விடும். மேலும் பிரிவினையை அகற்றுவதற்கு ஏதாவதொரு வழி திறந்து விடும். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவ்வாறு ஒருபோதும் நடக்காது. இந்த விஷயத்தையும் அன்னார் ஒப்புக் கொள்ளவில்லை. அப்போது சஹாபிகள் இவ்வாறு கூறினர்: ஒருவேளை உஸாமாவின் படையும் சென்று விட்டால் மேலும், இந்த மக்களுடன் தற்காலிக உடன்படிக்கையும் செய்யப்படவில்லையென்றால் பின்னர் எதிரியுடன் யார் போரிடுவார்? மதீனாவில் முதியவர்களும், பலவீனமான மக்களுமே உள்ளனர். மேலும் சில இளைஞர்களே உள்ளனர். அவர்கள் லட்சம் பேரை எவ்வாறு எதிர்கொள்ள முடியும்?

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு பதிலளித்தார்கள்: நண்பர்களே! உங்களால் அவர்களை எதிர்கொள்ள முடியாதென்றால் அபூபக்ர் தன்னந்தனியாக அவர்களை எதிர்கொள்ள புறப்பட்டு நிற்பார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: போர் கலையில் எந்த நபருக்கு அதிக அறிவு இல்லாமல் இருந்ததோ அந்த நபரின் வாதமாக இது இருந்தது. இவர் உள்ளத்தால் பலவீனமானவர் என்று எந்த நபரைப் பற்றி பொதுவாக கருதப்பட்டு வந்ததோ அந்த நபரின் வாதமாக இது இருந்தது. பின்னர் இந்த தைரியம், இந்த வீரம், இந்த நம்பிக்கை, இந்த உறுதி அவரிடம் எங்கிருந்து உருவானது? ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் நான் கிலாஃபத்தின் அந்தஸ்தில் இறைவன் புறமிருந்து நிறுத்தப்பட்டுள்ளேன். தன் மீதே அனைத்து பணிகளின் பொறுப்பும் உள்ளது என்பதை அன்னார் (ரலி) புரிந்திருந்தார்கள். இந்த விஷயத்திலிருந்தே அந்த நம்பிக்கை அன்னாரிடம் உருவானது. எனவே எனது கடமை என்னவென்றால், நான் போருக்காக புறப்பட்டு நிற்க வேண்டும். வெற்றி வழங்குவதும், வழங்காமல் இருப்பதும் இறைவனின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். இறைவன் வெற்றி வழங்க விரும்பினால் அவனே வழங்கி விடுவான். அவன் வெற்றி வழங்க விரும்பவில்லையென்றால் முழு படையும் சேர்ந்தாலும் கூட வெற்றி பெற முடியாது.

(கிலாஃபத்தே ராஷிதா, அன்வாருல் உலூம் தொகுதி 15 பக்கம் 543 – 545 – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்த முடிவு எப்படிப்பட்ட வலிமையான விளைவுகளை ஏற்படுத்தியது என்பதைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதியுள்ளார்கள்: அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சஹாபிகளின் விருப்பத்திற்கெதிராக ஹஸ்ரத் உஸாமா பின் ஸைத் (ரலி) அவர்களை படையுடன் மூதா நகரத்தை நோக்கி அனுப்பி வைத்தார்கள். எனவே 40 நாட்களுக்குப் பிறகு அந்தப் படை தனது பணியை முழுமை செய்து வெற்றியுடன் மதீனாவிற்கு திரும்பி வந்தது. இறைவனின் உதவியும், வெற்றியும் இறங்குவதை அனைவரும் தமது கண்களால் கண்டு கொண்டனர்.

இந்தப் போருக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பொய்வாதிகளின் குழப்பங்களின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். அந்த குழப்பத்திற்கு எப்படி தீர்வு கண்டார்கள் என்றால் அதை முற்றிலும் அழித்து விட்டார்கள். அந்தக் குழப்பம் முற்றிலும் அழிந்து விட்டது. அதன் பிறகு இதே நிலை தான் மார்க்கத்தை புறக்கணித்தவர்களுக்கும் ஏற்பட்டது. பெரும் சஹாபிகளும் கூட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கருத்து வேறுபாடு கொண்டிருந்தார்கள். ஏகத்துவம் மற்றும் நபித்துவத்தை ஏற்றுக் கொண்ட மக்களுடன் ஸகாத் கொடுக்க மறுத்ததன் காரணமாக மட்டுமே அவர்களுக்கு எதிராக நாம் எவ்வாறு வாள் ஏந்த முடியும்? என்று அந்த சஹாபிகள் கூறி வந்தனர். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மிகவும் துணிவுடனும், தைரியத்துடனும் செயல்பட்டவாறு, ஒருவேளை இன்று ஸகாத் கொடுக்காமல் இருப்பதற்கு அனுமதி வழங்கினால் பின்னர் கொஞ்சம், கொஞ்சமாக மக்கள் தொழுகை, நோன்புகளையும் கூட விட்டு விடுவார்கள். இஸ்லாம் பெயரளவில் மட்டுமே எஞ்சி நிற்கும் என்று கூறினார்கள்.

சுருக்கமாக அதுபோன்ற நிலைமைகளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸகாத் கொடுக்க மறுத்தவர்களுடன் போர் புரிந்தார்கள். விளைவு என்னவாக இருந்ததென்றால் அந்த மைதானத்திலும் அன்னாருக்கு வெற்றியும், உதவியும் கிடைத்தது. சீர்கெட்டுப் போன மக்கள் நேர்வழியின் பக்கம் திரும்பி வந்தனர்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 478)

இந்தத் தொடர் இன்னும் செல்கின்றது. இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில் அதனை நான் எடுத்துரைப்பேன்.

நான் எப்போதும் கூறி வருவதைப் போன்று இன்றைய நாட்களில் உலகத்தின் நிலைமைக்காக துஆக்கள் செய்து வாருங்கள். அதில் குறைவு வைக்காதீர்கள். உலகம் தம்மைப் படைத்த இறைவனை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்பதற்காக குறிப்பாக துஆ செய்யுங்கள். உலகை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கு இதுவே ஒரு தீர்வாகும். அல்லாஹ் கருணை செய்வானாக. நமது துஆக்களையும் ஒப்புக் கொள்வானாக.

நான் ஒரு மர்ஹூமின் நற்குறிப்பையும் செய்ய விரும்புகின்றேன். ஜுமுஆவிற்குப் பிறகு ஜனாஸா தொழ வைப்பேன். அது மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய மவ்லானா முபாரக் நஸீர் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் ஜாமிஆ அஹ்மதிய்யா கனடாவின் முதல்வராகவும் இருந்துள்ளார்கள். மேலும் கடனாவின் முபல்லிக் இன்சார்ஜ் ஆகவும் இருந்துள்ளார்கள். அன்னார் மார்ச் 8 ஆம் தேதி 87 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். மிகவும் தன்னலமற்றவராகவும், அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை கொண்டவராகவும், துஆ செய்யக் கூடியவராகவும், போதுமென்ற மனதை கொண்டவராகவும் அன்னார் இருந்தார்கள். மிகவும் எளிய இயல்பு படைத்த மனிதராக இருந்தார்கள். எப்போதும் அன்னாரை பார்க்கும்போது உண்மையான சான்றோரை பார்க்கும் உணர்வு எனக்கு ஏற்பட்டு வந்தது.

அன்னாரின் குடும்ப அறிமுகத்தைப் பற்றியும் நான் எடுத்துரைக்கிறேன். அன்னார் ஜமாஅத்தின் வெற்றிகரமான முபல்லிக்காக இருந்த மவ்லானா நஸீர் அஹ்மது சாஹிப் அலி மற்றும் மதிப்பிற்குரிய ஆமினா பேகம் சாஹிபா ஆகியோரின் மகனாக இருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் தந்தைவழிப் பாட்டனார் ஹஸ்ரத் பாபு ஃபகீர் அலி சாஹிப் (ரலி) மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கரத்தில் பைஅத் செய்திருந்தார்கள். பின்னர் காதியானின் முதல் ஸ்டேஷன் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். காதியானில் அன்னாருடைய தந்தைவழிப் பாட்டனாரின் வீடும் இருந்தது. அது ஃபகீர் மன்ஸில் என்ற பெயரால் அறியப்பட்டு வந்தது. மவ்லானா முபாரக் நஸீர் சாஹிப் அவர்களின் தந்தை ஹஸ்ரத் மவ்லானா நஸீர் அலி சாஹிப் அவர்களுக்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வழிகாட்டலுக்கேற்ப முதலில் 1929 ஆம் ஆண்டு கானாவில் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. அதன் பிறகு சிராலியோனில் அன்னார் பணியமர்த்தப்பட்டார்கள்.

1943 ஆம் ஆண்டில் அன்னாரின் தந்தையார் ஹஸ்ரத் மவ்லானா நஸீர் அஹ்மது அலி சாஹிப் சிராலியோனிலிருந்து திரும்பிச் சென்றிருந்தார்கள். அப்போது முபாரக் நஸீர் சாஹிப் அவர்களும் தமது தந்தை மற்றும் தாயாருடன் சிராலியோன் பயணத்தில் புறப்பட்டிருந்தார்கள். அந்த பயணத்தின்போது ஈமானை வலுவூட்டும் ஒரு சம்பவமும் நிகழ்ந்தது. மவ்லானா முபாரக் நஸீர் சாஹிப் அதனை குறிப்பிடுகின்றார்கள். கப்பல் மூலமான இந்தப் பயணம் மூன்று மாத கால பயணமாக இருந்தது. அந்த நேரத்தில் முபாரக் நஸீர் சாஹிப் அவர்களின் வயது 11 ஆக இருந்தது. பயணத்தின்போது அன்னாரின் உடல்நிலை மோசமானது. மேலும் நோயின் தாக்கம் எவ்வாறு வெளிப்பட்டுக் கொண்டிருந்தது என்றால் இனி குழந்தை உயிர் பிழைக்க மாட்டான் என்று தோன்றியது.

நான் கூறியதுபோன்று கடல் வழிப் பயணமாக இருந்தது. அப்போது கப்பலில் ஏறத் தொடங்கினார்கள் அல்லது கப்பல் மாறியிருந்தார்கள் அல்லது அப்போது கப்பலில் ஏறி

இருப்பார்கள். அல்லது பயணத்திற்கு முன்பான விஷயமாக இருக்கும். எவ்வாறிருப்பினும் கப்பலில் ஏறுவதற்கு முன்பே அன்னார் நோயுற்றிருந்தார்கள். கப்பல் நிர்வாகம் அவரது நிலைமையைப் பார்த்து அன்னாரின் தந்தையாரிடம் இவ்வாறு கூறியது: அதாவது உங்களது மகன் பாதி மரணித்து விட்டார். இவர் ஏறக்குறைய இறந்து விட்டார். ஒருவேளை பயணத்தின்போது இவர் இறந்து விட்டால் எங்களிடத்தில் கப்பலில் பிணத்தை வைப்பதற்கு எந்த குளிர்சாதனப் பெட்டியும் இல்லை. எந்த ஏற்பாடும் இல்லை. எனவே எங்களால் உங்களது பிள்ளையின் காரணமாக உங்களை அழைத்துக் கொண்டு செல்ல இயலாது.

மவ்லானா நஸீர் சாஹிப் அவர்கள் கூறினார்கள்: எனக்கு இரண்டாவது கலீஃபா அவர்களின் கட்டளை உள்ளது. நான் எல்லா நிலையிலும் இந்த கப்பலில் பயணித்தே தீர வேண்டும். பின்னர் கப்பல் நிர்வாகம் இந்த நிபந்தனையின் கீழ் கப்பலில் ஏறுவதற்கு அன்னாருக்கு அனுமதி வழங்கியது. அதாவது ஒருவேளை அன்னாரின் மகன் பயணத்தின்போது மரணித்து விட்டால் அவரது சடலத்தை கடலில் வீசுவதற்கு அனுமதி தருகின்றேன் என்று எழுதிக் கொடுக்க வேண்டும். இந்த நிபந்தனையை கப்பலின் கேப்டன் கூறியபோது முபாரக் நஸீர் அஹ்மது சாஹிப் அவர்களின் தாயார் அழத் தொடங்கினார்கள். மிகவும் மன வேதனை அடைந்தார்கள். அப்போது மவ்லானா நஸீர் அலி சாஹிப் அவர்களிடம், நாம் வேறொரு கப்பலில் செல்வோம் என்று அவர்களது மனைவி கூறினார்கள். மவ்லானா நஸீர் அலி சாஹிப் அவர்கள் அவரது மனைவிக்கு இவ்வாறு ஆறுதல் வழங்கினார்கள்: அதாவது நான் ஒரு முபல்லிக் ஆவேன். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் ஒரு பொறுப்பை கொடுத்து என்னை அனுப்பியுள்ளார்கள். வேறொரு கப்பல் எப்போது கிடைக்கும் என்று எனக்கு என்ன தெரியும்? நீ நம்பிக்கையுடன் இரு. முபாரக்கிற்கு ஒன்றும் நடக்காது என்று கூறினார்கள்.

இவ்வாறு கூறியவாறு அன்னார் கப்பலின் கேப்டனிடம் நம்பிக்கை நிறைந்த வார்த்தைகளில், எங்கே கையெழுத்திட வேண்டும்? காகிதத்தை கொண்டு வாருங்கள் என்று கூறினார்கள். பின்னர் இந்த சிறுவன் மரணித்து விட்டால் இவனை கடலில் வீசி விடுங்கள். ஆனால் அத்துடன் உங்களுக்கு நான் இதனையும் கூறி விடுகின்றேன். அவருக்கு ஒன்றும் ஆகாது என்று கேப்டனிடம் கூறினார்கள். இது அன்னாரின் தந்தையாருக்கு அல்லாஹ்வின் இருப்பின் மீதிருந்த முழுமையான நம்பிக்கையாகும். நான் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளேன். அவனது மார்க்கத்தை பரப்புவதற்காக செல்கின்றேன். இறைவன் நிச்சயம் எனக்கு உதவியும் செய்வான். எனது குடும்பத்தினரையும் பாதுகாப்பான் என்று அன்னார் நம்பி இருந்தார்கள்.

எனவே இறைவனின் அருளால் அந்த 11 வயது சிறுவன் உயிர்பிழைக்க மட்டும் செய்யவில்லை. மாறாக, அவர் 87 வயது நீண்ட ஆயுளைப் பெற்றார். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கு தொண்டாற்றும் நற்பேறும் கிடைத்தது. தமது முன்னோர்களின் அடிச்சுவட்டின்படி நடந்து தமது வாழ்க்கையையும் அர்ப்பணித்தார். அதற்கும் நற்பேறு பெற்றார். மார்க்கத் தொண்டிற்கான மைதானத்தில் அல்லாஹ்வின் மீதான முழுமையான நம்பிக்கையில் அவரும் உயர்தரமான முன்னுதாரணங்களை நிலைநாட்டினார்.

பட்டப்படிப்பிற்குப் பிறகு அரசாங்க துறையில் நல்ல வேலை வாய்ப்பு கிடைத்திருந்தது. அந்த துறையில் சிறிது காலம் அன்னார் பணி செய்தார்கள். பின்னர் வக்ஃப் செய்யுங்கள். விரும்பினால் தற்காலிக வக்ஃப் கூட செய்யலாம் என்ற ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் அறிவிப்பை அல்ஃபஸ்ல் பத்திரிகையில் அன்னார் படித்தார்கள். அப்போது அன்னார் தனது பணியை ராஜினாமா செய்து விட்டு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் சமூகத்தில் தற்காலிக வக்ஃபிற்காக தம்மை முன்னிலைப்படுத்தினார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் வழிகாட்டலின் ஒளியில் 1963 ஆம் ஆண்டு முதல் முறையாக வக்ஃபே ஆர்ஸி செய்வதற்கு சிராலியோன் சென்றிருந்தார்கள். அங்கு அன்னாரின் தந்தையார் ஹஸ்ரத் மவ்லானா நஸீர் அலி சாஹிப் அவர்களுக்கும் ஒரு நீண்ட காலம் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்திருந்தது. அன்னாரின் கபரும் அங்கே தான் இருந்தது. மவ்லவி நஸீர் அலி சாஹிப் அவர்கள் அங்கு தான் நல்லடக்கம் செய்யப்பட்டிருந்தார்கள்.

சிராலியோன் சென்றடைந்ததும் முதன் முதலில் அன்னார் தமது தந்தையாரின் கபருக்கு சென்றார்கள். அந்த நேரத்தில் அன்னார் தமது தந்தையின் அந்த சொற்களை நினைவு கூர்ந்தார்கள். அதாவது மதிப்பிற்குரிய மவ்லானா நஸீர் அலி சாஹிப் அவர்கள் 26 நவம்பர் 1945 ஆம் ஆண்டு தமது ஒரு சொற்பொழிவில் இவ்வாறு கூறியிருந்தார்கள்: அதாவது இன்று நாம் அல்லாஹ்விற்காக ஜிஹாத் செய்வதற்கும், இஸ்லாத்தை மேற்கு ஆஃப்ரிக்காவில் பரப்புவதற்காகவும் செல்கின்றோம். மரணம் மனிதனுடன் எப்போதும் இணைந்துள்ளது. நம்மில் ஒருவர் மரணித்து விட்டால் நீங்கள் இவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும். அதாவது உலகத்தின் தொலை தூர பகுதி ஒன்று உள்ளது. அங்கு சிறிய அளவிலான பூமி அஹ்மதிய்யத்திற்கு சொந்தமாக உள்ளது. அஹ்மதி இளைஞர்களின் கடமை என்னவென்றால், அதுவரை சென்றடைய வேண்டும். மேலும் எந்த நோக்கத்திற்காக இந்த பூமியில் நாம் கபர்களின் வடிவில் நிலத்தை கைப்பற்றி உள்ளோமோ அந்த நோக்கத்தை முழுமை செய்ய வேண்டும்.

அன்னார் கூறியதன் பொருள் என்னவாக இருந்ததென்றால், அஹ்மதிய்யத்தின் சிறிய அளவிலான நிலம் உள்ளது. அங்கு ஓர் அஹ்மதி முபல்லிக்கின் கபர் உள்ளது. அந்த கபரின் காரணமாக அந்த நிலத்தின் மீது அவரின் அதிகாரம் உள்ளது. எனவே எமது கபர்களின் சார்பாக இதுவே எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது நமது பிள்ளைகளுக்கு நாம் எப்படி பயிற்சி கொடுக்க வேண்டுமென்றால், எந்த நோக்கத்திற்காக நமது உயிர்கள் அர்ப்பணமாகி உள்ளனவோ அதனை அவர்கள் முழுமை செய்ய வேண்டும்.

எனவே அன்னார் தமது தந்தையின் உயிரை முழுமை செய்தவாறு மவ்லானா முபாரக் நஸீர் சாஹிப் அங்கு சென்றடைந்தார்கள். மேலும் தமது தந்தையின் கபரில் சென்று ''லெப்பைக்'' நான் வந்து விட்டேன். நான் உங்களின் அழைப்பிற்கு பதில் கொடுப்பதற்காக வந்துள்ளேன் என்று கூறினார்கள்.

சிராலியோனின் பல்வேறு இடங்களில் தொண்டாற்றுவதற்கு அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது. அதன் பிறகு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வழிகாட்டலின்படி 1985 ஆம் ஆண்டு அன்னார் பாகிஸ்தானிற்கு திரும்பி வந்தார்கள். 1985–ல் ஆஃப்ரிக்காவிலிருந்து திரும்பி வந்தபோது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களிடம், தற்காலிக வக்ஃபிற்கு பகரமாக நிரந்தரமாக வாழ்க்கையை அர்ப்பணிப்பதற்கு அன்னார் விண்ணப்பித்தார்கள். அதனை ஹுஸூர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் 1988 ஆம் ஆண்டு அன்னார் முபல்லிக் ஆக கனடாவிற்கு அனுப்பப்பட்டார்கள். அங்கு பல்வேறு இடங்களில் அன்னார் முபல்லிக் ஆக தொண்டாற்றி வந்தார்கள்.

கனடாவில் ஜாமிஆ திறக்கப்பட வேண்டுமென்று 2003 ஆம் ஆண்டில் முடிவெடுக்கப்பட்டபோது அதற்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபா அவர்கள் ஒப்புதலும் வழங்கி இருந்தார்கள். ஜாமிஆ முதல்வராக அன்னாரை நியமித்திருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் நான்காவது கலீஃபா அவர்களின் வாழ்க்கையில் ஜாமிஆ திறக்கப்படவில்லை. ஆனால் பின்னர் எனது காலத்தில் அது திறக்கப்பட்டது. அப்போது இவரே ஜாமிஆ முதல்வராக இருப்பார்கள் என்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் நியமித்திருந்த அந்த ஒப்புதலுக்கு நானும் ஒப்புதல் வழங்கினேன். எவ்வாறிருப்பினும் அன்னார் ஜாமிஆ அஹ்மதிய்யா கனடாவின் முதல் முதல்வராக இருந்தார்கள். பின்னர் 2009 ஆம் ஆண்டு வரை ஜாமிஆவில் முதல்வராக தொண்டாற்றினார்கள்.

2010 ஆம் ஆண்டு கனடா மிஷனரியாக நான் அவர்களை நியமனம் செய்தேன். 2018 ஆம் ஆண்டு வரை முழுமையான முறையில் தொண்டாற்றுவதற்கு நற்பேறு கிடைத்தது. 59 ஆண்டுகள் அவருக்கு தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. தற்காலிக வக்ஃப்பும் கூட நிரந்தர வக்ஃப் ஆகவே இருந்தது. அதேபோன்று மவ்லானா சாஹிப் தலைமையக பிரதிநிதியாக பல்வேறு ஜல்ஸாக்களிலும், நிகழ்ச்சிகளிலும் பங்கு பெறுவதற்கு நற்பேறு பெற்றார்கள். அன்னாரின் சொற்பொழிவுகளை நம்மவர்களும், அந்நியர்களும் மிகவும் விரும்பி வந்தார்கள். மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சொற்பொழிவுகளாக அவை இருந்து வந்தன. கேட்பவர்களை முற்றிலும் தன் பக்கம் ஈர்த்து வந்தார்கள்.

2016 ஆம் ஆண்டில் குவேட்டமாலா நாட்டில் நூர் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியில் எனது பிரதிநிதியாக பங்கு பெறும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்தது. பின்னர் அன்னாருடைய தப்லீக் கட்டுரைகளும் வெளியாகி உள்ளன. கனடாவின் தேசிய செய்தி, டோரோன்டா ஸ்டார், ஆட்வா ஸ்டேஸன் போன்ற பத்திரிகைகளிலும் வெளியாகி வந்தன. மவ்லானா முபாரக் நஸீர் சாஹிப் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புத்தகங்களான தஜல்லியாத்தே இலாஹிய்யா, ஃபத்ஹே இஸ்லாம் போன்றவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்வதற்கும் நற்பேறு கிடைத்தது. பின்னர் ஹஸ்ரத் நான்காவது

கலீஃபா அவர்களின் புத்தகமான Gulf Crisis என்ற நூலையும் அன்னார் மொழியாக்கம் செய்துள்ளார்கள்.

அன்னார் விட்டுச் சென்றவர்களில் அன்னாரின் மனைவி அமத்துல் ஹபீஸ் நஸீர் சாஹிபா மற்றும் 3 மகன்களும், 2 மகள்களும் அடங்குவர். நான் கூறியதுபோன்று மர்ஹூம் ஏராளமான சிறப்புகளுக்கு சொந்தக்காராக இருந்தார். ஒரு முன்னுதாரணமான வாழ்க்கையை அர்ப்பணித்தவராக இருந்தார்கள். முரப்பிமார்களுக்கு குறிப்பாக ஒரு முன்னுதாரணமாக இருந்தார்கள். உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குதலின் ஒரு செயல் சித்திரமாக அன்னாரின் வாழ்க்கை இருந்தது. எப்போதும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றினார்கள். காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுவதை தமது குறிக்கோளாக ஆக்கிக் கொண்டார்கள். நான் கூறியதுபோன்று சொற்பொழிவு கலையிலும் நிபுணத்துவம் பெற்றிருந்தார்கள். உருது, ஆங்கிலம் இரண்டு மொழிகளிலும் மிகவும் புலமை பெற்ற பேச்சாளராக இருந்தார்கள். தாக்கம் நிறைந்த சொற்பொழிவாற்றி வந்தார்கள்.

அன்னாரின் துணைவியார் அமத்துல் ஹபீழ் சாஹிபா இவ்வாறு எழுதுகின்றார்கள்: முழு வாழ்க்கையையும் அன்னார் அதிக நன்மையுடனும், இறையச்சத்துடனும் கழித்துள்ளார்கள். ஜமாஅத்தின் ஒவ்வொரு பைசாவை செலவிடுவதிலும் கவலை கொண்டிருந்தார்கள். தமது வாழ்க்கையை மிக எளிமையான வாழ்க்கையாகவே கழித்தார்கள். சிராலியோன் நாட்டை விட்டு வந்த பிறகும் கூட அங்குள்ள ஏராளமான ஏழைகளுக்கு நிரந்தரமாக, மௌனமாக உதவி செய்து வந்தார்கள். அன்னார் சிறந்த வாழ்க்கையை அர்ப்பணித்தவர் என்பதுடன் சிறந்த கணவராகவும், மிகவும் பரிவுமிக்க தந்தையாகவும் இருந்தார்கள் என்பதற்கு நான் சாட்சி ஆவேன். ஜமாஅத் என் மீது இவ்வளவு செலவிடுகின்றது. அவ்வாறிருக்கும்பொழுது நான் எவ்வாறு ஜமாஅத்திற்கு பயன் சேர்க்க வேண்டும் என்ற கவலையிலேயே எப்போதும் இருந்து வந்தார்கள். காலத்தின் கலீஃபாவின் கோபத்தை எந்நிலையிலும் என்னால் தாங்கிக் கொள்ள முடியாது என்று பெரும்பாலும் அன்னார் கூறி வந்தார்கள்.

அன்னாரின் பிள்ளைகளின் கருத்துக்களும் உள்ளன. அனைவரும் பெரும்பாலும் இந்த விஷயத்தையே எழுதியுள்ளனர். அதாவது எங்களது தந்தைக்கு அல்லாஹ்வின் மீதும், மறுமை நாளின் மீதும் மிக உறுதியான நம்பிக்கை இருந்தது. கிலாஃபத்திற்கும், ஜமாஅத் அமைப்பிற்கும் கட்டுப்படுவதில் முழுமையான உறுதி இருந்தது. பின்னர் அல்லாஹ்வின் மீது மிக அதிகமான தவக்குல் இருந்தது. என்னை அல்லாஹ் ஒருபோதும் கைவிட மாட்டான். எப்போதும் எனக்கு உதவி செய்வான் என்று அன்னார் பெரும்பாலும் கூறி வந்தார்கள். அல்லாஹ்வும் அன்னாருடன் அவ்வாறே நடந்து கொண்டான். அன்னார் மிஷனரி இன்சார்ஜ் ஆக ஆனபோது பொருளாதார திட்டங்களுக்காக எங்கு சென்றாலும் அதேபோன்று அமீர் சாஹிப் அன்னாரை எங்கு அனுப்பி வைத்தாலும் அல்லது அதுமட்டுமின்றி ஓய்வு பெற்ற பிறகும் அன்னாரின் உடல்நிலை மோசமானபோதும் சில முறை அன்னாரிடமிருந்து நாங்கள் பயன்பெற்று வந்துள்ளோம். அன்னார் எங்கே சென்று வந்தாலும் பொருளாதார தியாகங்களுக்கு அறிவுறுத்தி வந்தார்கள். அதனால் மக்கள் மீது தாக்கம் ஏற்பட்டு வந்தது. எனவே முதலில் அவர்கள் அதில் தமது பங்கை செலுத்தி வந்தார்கள். பின்னர் ஜமாஅத் மக்களுக்கும் அறிவுறுத்தி வந்தார்கள்.

அன்னாரின் மூத்த மகள் இவ்வாறு கூறுகின்றார்கள்: அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் உறுதியான தொடர்பு வைப்பதற்கு ஆலோசனை வழங்கி வந்தார்கள். எப்போதும் ஜமாஅத் அமைப்பின் மீதான நேசம் மற்றும் மரியாதையை உருவாக்குவதற்கு முயற்சி செய்து வந்தார்கள்.எப்போதும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் எல்லா வழிகாட்டல் படியே, தான் அமல் செய்ய வேண்டும் என்பதே அன்னாரின் ஆசையாக இருந்தது. இந்த விஷயங்களுக்கு அறிவுரை செய்யாத சபைகள் மிக அரிதாகவே இருக்கும்.

பின்னர் மகன்வழிப் பேரன்களும், பேத்திகளும், மகள்வழிப் பேரன்களும், பேத்திகளும் ஒன்றுகூடும்போதெல்லாம், நம்மை ஒன்றுகூட்டி அன்னார் இந்த அறிவுரையை செய்வார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அதாவது நாம் உலகப் பணிகளில் வீழ்ந்து விடக் கூடாது. நமது தொடர்பு அல்லாஹ் மற்றும் கிலாஃபத்துடன் இருப்பதை நாம் எப்போதும் உறுதி செய்து கொள்ள வேண்டும் என்ற விஷயமே அன்னாரின் தூதுச் செய்தியாக எப்போதும் இருக்கும்.

அடுத்து கூறுகின்றார்கள்: ஜமாஅத்தின் பணி முழுமையடைந்தே தீரும். அதில் எந்த ஐயமும் இல்லை. நீங்கள் ஜமாஅத்திற்கு தொண்டாற்றவில்லையென்றால் அல்லாஹ் வேறு மக்களை இதை விட சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு கொண்டு வந்து விடுவான்.

பின்னர் அன்னாரின் இளைய மகள் ஒரு சம்பவத்தை எழுதுகின்றார்கள்: சிராலியோனில் ஒரு பள்ளிவாசல் கட்டுமான நேரத்தில் வேலையாட்கள் சம்பளம் கேட்டனர். கட்டுமானம் நடைபெற்று வந்தது. பணம் தீர்ந்து விட்டது. அந்த நேரத்தில் தந்தையாரிடம் கொடுப்பதற்கு தொகை இல்லை. இருந்தபோதிலும் நாளை வாருங்கள். உங்களுக்கும் சம்பளம் கொடுக்கப்படும் என்று மவ்லானா முபாரக் நஸீர் சாஹிப் அவர்கள் அவர்களிடம் கூறி விட்டார்கள். காலை விடிந்தது. முபாரக் நஸீர் சாஹிப் தனது வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள். அப்போது வேலையாட்கள் தமக்கு முன்னால் நின்று கொண்டு காத்திருப்பதை கண்டார்கள். பணத்திற்கான ஏற்பாடு அதுவரை நடக்கவில்லை. அப்போது அன்னார் அந்த வேலையாட்களிடம், தற்போது என்னிடம் பணம் இல்லை. ஆனால் நான் துஆ செய்து கொண்டிருக்கின்றேன். சிறிது நேரம் காத்திருக்கவும். இன்ஷா அல்லாஹ் விரைவாக அல்லாஹ் ஏற்பாடு செய்து விடுவான் என்று கூறினார்கள்.

அதற்கிடையில் ஒரு வண்டி வேகமாக அன்னாரிடம் வந்தது. அவருக்கு ஒரு பார்சல் ஒன்றை கொடுத்தது. அதில் தொகை இருந்தது. நீங்கள் பள்ளிவாசல் கட்டிக் கொண்டிருக்கின்றீர்கள் என்று ஒருவர் கேள்விப்பட்டார். எனவே அவர் இந்தப் பணத்தை அனுப்பியுள்ளார். இதை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள் என்று அன்னாரிடம் கூறப்பட்டது. யார் இந்த பணத்தை கொடுத்தது? என்று தந்தையார் கேட்பதற்கு முன்பாக அந்த வண்டி பார்சலை கொடுத்து விட்டு வேகமாக சென்று விட்டது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் தமது துஆவை செவிமடுத்து விட்டான் என்ற நம்பிக்கை அன்னாருக்கு ஏற்பட்டது. இவ்வாறு அன்னார் வேலையாட்களுக்கு பணத்தை கொடுத்து விட்டார்கள்.

ஆக அன்னாருக்கு அல்லாஹ் மீது இருந்த உறுதியான நம்பிக்கை இதுவாக இருந்தது. பின்னர் அல்லாஹ்வும் அன்னாருடன் அவ்வாறே நடந்து கொண்டான். அல்லாஹ்வின் இதுபோன்ற நடைமுறை மற்றும் அது தொடர்பான சம்பவங்கள் ஏராளம் உள்ளன. அன்னாரைக் குறித்து மக்கள் அவற்றை எழுதியுள்ளனர். ஏராளமான மக்களும், முரப்பிமார்களும் எழுதியுள்ளனர். நான் கூறியதுபோன்று நிச்சயம் அன்னார் ஒரு செயல்மிக்க அறிஞராக இருந்தார்கள். எனவே தான் அன்னாரின் சொற்பொழிவுகளும் மக்கள் மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆனால் கிலாஃபத்திற்கு முன்னால் அன்னாரின் பணிவு எல்லையற்றதாக இருந்தது.

அல்லாஹ் அன்னாரின் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகளையும் அன்னாரின் சந்ததிகளையும் அன்னாரின் அடிச்சுவட்டின் வழி நடக்கும்படி செய்வானாக. அன்னார் செய்த துஆக்களுக்கு அன்னாரின் பிள்ளைகளையும், தலைமுறையையும் வாரிசுகளாக்குவானாக. அல்லாஹ் அன்னாரைப் போன்ற தன்னலமற்ற தொண்டாற்றக் கூடிய நபர்களை ஜமாஅத்திற்கும் வழங்கி வருவானாக.

ஜாமிஆ அஹ்மதிய்யா கனடாவில் அன்னாரிடம் படித்த முரப்பிமார்கள் அன்னாரைக் குறித்து ஏராளமான சம்பவங்களை எழுதியுள்ளனர். அன்னார் எவ்வாறு தர்பிய்யத் வழங்கி வந்தார்கள்? தப்லீக் எவ்வாறு செய்ய வேண்டுமென்று கற்பித்தார்கள்? ஒழுக்கத்தை எவ்வாறு கற்பித்தார்கள்? மார்க்கத்தை எவ்வாறு கற்பித்தார்கள்? ஆகியவற்றை குறித்து எழுதியுள்ளனர்.

எவ்வாறிருப்பினும் அந்த முரப்பிமார்கள் மிகவும் பயன் பெற்றுள்ளனர். அவர்கள் இதனை நினைவிற் கொள்ள வேண்டும். இந்த சம்பவங்கள் ஞாபகம் வைப்பதற்காக மட்டுமோ அல்லது எடுத்துரைப்பதற்காக மட்டுமோ அல்ல. மாறாக, அந்த முரப்பிமார்களும் அந்த விஷயங்களில் செயல் வடிவில் முன்மாதிரியாக ஆக வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கும் நற்பேறு வழங்குவானாக.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

# ஈதுல் ஃபித்ர் குத்பா பேருரை

**மனிதனிடத்தில் தூய மாற்றங்கள் நிரந்தரமாக உருவாகி விடும்போதுதான் ரமலான் மாதம் பயனளிக்கும். மேலும் அந்த மாற்றங்கள் எப்போதும் வாழ்க்கையின் நிரந்தர அங்கமாக ஆகிவிடும்போதுதான் பெருநாளின் மகிழ்ச்சியும் கிடைக்க முடியும்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 14 மே 2021 ஆம் தேதி** ஆற்றிய **ஈதுல் ஃபித்ர் குத்பா பேருரை**

ஹுஸூர் அவர்கள் தஷஹ்ஹுத் மற்றும் தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு கூறினார்கள்:

அல்லாஹ்வின் எல்லையற்ற அருளும் கருணையும் என்னவென்றால், அவன் நமக்கு ரமலான் மாதத்தை கடந்து இன்றைய நாள், பெருநாளை பார்க்கும் நற்பேறை வழங்கியுள்ளான். ஆனால் ரமலானின் நோக்கம் இதுவாகத்தான் இருந்ததா என்ன? நாம் 29, 30 நோன்புகளை நோற்க வேண்டும். பின்னர் பெருநாள் கொண்டாட வேண்டும். மகிழ்ச்சியடைய வேண்டும். இதுதான் நோக்கமா? மகிழ்ச்சியடைவது, உண்பது, விளையாடுவது போன்றவற்றைத்தான் அல்லாஹ் நம்மிடமிருந்து எதிர்பார்க்கின்றானா? (இல்லை). ரமலானின் நோன்புகளை நோற்பதன் நோக்கத்தையும், பெருநாளின் நோக்கத்தையும் புரிந்து கொள்பவர்களாக இந்த ரமலான் நம்மை ஆக்கும்போதுதான் அல்லாஹ்வின் அந்த கருணையை உண்மையில் நாம் பெறக் கூடியவர்களாக இருப்போம்.

இந்த ரமலான் மற்றும் பெருநாளின் நோக்கம் என்னவென்றால், நாம் இதில் பெற்ற இந்த பரக்கத்துகள் மற்றும் தூய மாற்றங்கள் நிரந்தரமாக தென்பட வேண்டும். உண்மையில் நம்மிடம் நாம் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளோம் என்றால் பின்னர் 30 நோன்புகளுக்குப் பிறகு அந்த விஷயங்கள் தென்பட வேண்டும். எனவே மனிதனிடத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் நிரந்தரமாக ஆகிவிடும்போதுதான் ரமலான் பயனளிக்கும். மேலும் இந்த மாறுதல்கள் வாழ்க்கையின் அங்கமாக நிரந்தரமாக ஆகிவிடும்போதுதான் பெருநாளின் மகிழ்ச்சியை பெற முடியும்.

நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். நாம் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் உண்மைப்பேரன்பர் மற்றும் காலத்தின் இமாமை ஒப்புக் கொண்டுள்ளோம். எவ்வாறு ஒருவர் உண்மையான நம்பிக்கையாளராக இருக்க முடியும்? என்பது குறித்து அன்னார் (அலை) அவர்கள் நமக்கு வழிகாட்டியுள்ளார்கள். அன்னார் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் தற்போது சிலவற்றை நான் எடுத்துரைப்பேன். நாம் ரமலானின் அருளை தொடரச் செய்யக் கூடியவர்களாகவும், உண்மையான இன்பம் மற்றும் கொண்டாட்டத்தை மேற்கொள்பவர்களாகவும் எவ்வாறு ஆக முடியும்? மேலும் உண்மையான பெருநாளை கொண்டாடுவதற்கு நாம் அடைய வேண்டிய தரம் என்ன? அதன் அவசியம் என்ன? என்பதையும் நான் எடுத்துரைப்பேன்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: நாம் அல்லாஹ்வை வணங்குவதாகவும், அவன் மீது நேசம் கொள்வதாகவும் வாதம் செய்கின்றோம். ஆனால் அந்த அன்பின் தரம் என்னவாக இருக்க வேண்டும்? எந்த தரத்தை பெற்று நாம் இறைவனை அடைய முடியும்? போன்றவற்றை விளக்கியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உண்மையான ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்கு அவசியம் என்னவென்றால், இறைவனின் நேசத்தில் முழுமையான பங்கு பெற வேண்டும். செயல் வடிவில் அது முழுமை பெறாத வரை அந்த அன்பு நிரூபணமாக முடியாது. ஒருவர் கற்கண்டு பெயரை கூறி விடுவதால் அது இனிப்பாக பயன்பட்டு விடாது. ஒருவர் நாவால் ஒருவருடைய நட்பை ஒப்புக் கொள்கின்றார். ஆனால் துன்பத்தின்போதும், தேவையின்போதும் அவருக்கு உதவியும், ஒத்தாசையும் செய்வதிலிருந்து விலகி நிற்கின்றார் என்றால் அந்த நண்பர் உண்மையாளராக இருக்க முடியாது. அதேபோன்று இறைவனின் ஏகத்துவத்தை வாயளவில் ஒப்புக் கொண்டு விட்டு அவன் மீதான நேசத்தையும், வெறும் நாவளவில் ஒப்புக் கொள்வதால் எந்த நன்மையும் இல்லை. மாறாக, நாவளவிலான ஒப்புதலின் பங்கிற்கு பகரமாக செயல் அளவிலான பகுதியையே அவன் அதிகம் விரும்புகின்றான். இதன் மூலம் நாவளவிலான ஒப்புதலுக்கு எந்த பொருளும் இல்லை என்பதும் இதன் கருத்து அல்ல. ஒருபோதும் அப்படியல்ல.

எனது நோக்கம் என்னவென்றால், நாவளவிலான ஒப்புதலுடன் செயல் ரீதியான ஒப்புதலும் அவசியம் ஆகும். எனவே இறைவழியில் உங்களது வாழ்க்கையை அர்ப்பணம் செய்வது அவசியமாகும். இதுவே இஸ்லாம் ஆகும். இந்த நோக்கத்திற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன். இந்த நேரத்தில் எவர் இறைவன் உருவாக்கி இருக்கின்ற இந்த நீரூற்றிற்கு அருகில் வருவதில்லையோ அவர் நிச்சயம் நற்பேறு இழந்தவர் ஆவார்.

தொழுகையின் முக்கியத்துவம் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

தொழுகை மிகவும் அவசியமான விஷயமாகும். அது நம்பிக்கையாளரின் உயர் படித்தரமாகும். இறைவனிடம் துஆ வேண்டுவதற்கு சிறந்த வழிமுறை தொழுகை ஆகும். வெறும் குனிந்து எழுவதோ அல்லது கோழியைப் போன்று கொத்துவதோ தொழுகை அல்ல. தொழுகை என்பது இறைவன் முன் ஆஜராகுவதாகும். இறைவனை புகழ்வதற்கும், அவனிடம் தனது பாவங்களை மன்னிக்கப்பட செய்வதற்குமுரிய வழிமுறையின் பெயரே தொழுகை ஆகும். எனவே தொழுகையை மிகவும் நல்ல முறையில் தொழுங்கள். நீங்கள் தொழுகைக்காக நிற்கின்றீர்கள் என்றால் நீங்கள் இறைவனுக்கு கட்டுப்படுவதில் மிகத் தயாராக இருக்கின்றீர்கள் என்பதை உங்களது வடிவம் வெளிப்படுத்த வேண்டும். குனியும்போது உங்களது உள்ளமும் குனிகின்றது என்பது மிகத் தெளிவாக தெரிய வேண்டும். சஜ்தா செய்கின்றீர்கள் என்றால் எவரது உள்ளம் அஞ்சுகின்றதோ அவரைப் போன்று சஜ்தா செய்ய வேண்டும். தொழுகைகளில் உங்களது மார்க்கம் மற்றும் உலகத்திற்காக துஆ செய்ய வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: அதுபோன்ற தொழுகைகள் நமக்கு கிடைத்து விட்டால் பின்னர் அந்த நாள் நமக்கு உண்மையான பெருநாளாக இருக்கும். நாம் இதனை பெறுவதற்காக முயற்சி செய்கின்றோமா? என்று நம்மை நாமே ஆய்வு செய்வது அவசியமாகும். ஏனென்றால் அப்போது தான் நம்மால் உண்மையான பெருநாளை கொண்டாட முடியும். எதிர்வரும் நாட்களில் இவ்வாறு அமல் செய்தும், அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்கு முயற்சி செய்தும் எங்களுக்கான பெருநாளின் ஏற்பாட்டை செய்து கொள்வோம் என்று இந்த ரமலானில் நாம் இந்த உடன்படிக்கையை செய்துள்ளோம்.

ஓர் உண்மையான முஸ்லிம் எப்படி இருக்க வேண்டும்? இது குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஓர் உண்மையான முஸ்லிம் இறைவனின் கட்டளையிலிருந்து வெளியில் இருப்பதை தமக்கு அழிவின் காரணியாக கருதுகின்றார். இறைவனுக்கு கட்டுப்படாமையில் எவ்வளவு தான் எளிமை மற்றும் மகிழ்ச்சிக்கான வாக்குறுதி வழங்கப்பட்டாலும் சரியே. எனவே உண்மையான முஸ்லிமாக ஆகுவதற்கு அவசியம் என்னவென்றால், இறைவன் மீதான நேசமும், கட்டுப்படுதலும் நற்கூலி, தண்டனைக்கான அச்சம் போன்ற எந்த எதிர்பார்ப்பின் அடிப்படையிலும் இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட இயல்பை பெற வேண்டும். பின்னர் அந்த நேசம் சுயமே அதற்கு ஒரு சொர்க்கத்தை உருவாக்கி விடுகின்றது. உண்மையான சொர்க்கம் இதுவே ஆகும். இந்த வழியை மேற்கொள்ளாதவரை எவரும் சொர்க்கத்தில் நுழைய முடியாது. எனவே என்னுடன் தொடர்பு வைத்துள்ள உங்களுக்கு இதே வழியில் நுழைவதற்கு போதனை செய்கின்றேன். ஏனென்றால் சொர்க்கத்திற்கான உண்மையான வழி இதுவே ஆகும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: எனவே நாம் பெற வேண்டிய உண்மையான பெருநாள் மகிழ்ச்சியும், சொர்க்கமும் இதுவே ஆகும். நாம் இவ்வாறு பெறுநாளை கொண்டாடுவதற்குாக தயாராக இருக்கின்றோமா? அந்த சொர்க்கத்தை பெறுவதற்கு நாம் முயற்சி செய்து வருகின்றோமா? என்று நாம் நம்மை நாமே ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

திருக்குர்ஆன் ஓதுங்கள். இறைவனிடமிருந்து ஒருபோதும் அவநம்பிக்கை அடையாதீர்கள். நம்பிக்கையாளர் இறைவன் மீது ஒருபோதும் நிராசை அடைவதில்லை. அது நிராகரிப்பாளர்களின் பழக்கங்களில் ஒன்றாகும். நிராகரிப்பாளர் இறைவனிடமிருந்து நிராசை அடைந்து விடுகின்றார். நமது இறைவன் எல்லா விஷயங்களின் மீதும் ஆற்றல் படைத்தவனாக இருக்கின்றான். திருக்குர்ஆன் மொழியாக்கத்தையும் படித்து வாருங்கள். தொழுகைகளை அழகுபடுத்தி தொழுங்கள். அதன் பொருளையும் புரிந்து கொள்ளுங்கள். உங்களது மொழியில் துஆக்கள் செய்யுங்கள். திருக்குர்ஆனை ஒரு சாதாரண நூலாக கருதி படிக்காதீர்கள்.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 21 April 2022 Issue No. 16

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

மாறாக, இறைவனின் வேதமாக கருதி ஓதுங்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தொழுது வந்ததைப் போன்று நீங்கள் தொழுங்கள். ஆயினும் வழக்கமான வழிமுறைக்குப் பிறகு உங்களது தேவைகள் மற்றும் உதவிகளை உங்களது தாய்மொழியில் நிச்சயம் கேட்டுக் கொள்ளுங்கள். மேலும் இறைவனிடம் வேண்டுங்கள். அதில் எந்தத் தவறும் இல்லை. அதனால் ஒருபோதும் தொழுகை வீணாகி விடாது.

இன்றைய நாட்களில் மக்கள் தொழுகையை சீர்கெடுத்துள்ளனர். அவர்கள் தொழவா செய்கின்றனர்? மாறாக, குனிந்து எழுகின்றனர். தொழுகையை கோழி கொத்துவதைப் போன்று வேகவேகமாக குனிந்து எழுகின்றனர். மேலும் பின்னர் துஆவிற்காக அமர்ந்திருக்கின்றனர். தொழுகையின் அசல் சாறும், ஆன்மாவும் துஆவே ஆகும். ஆனால் தொழுகையிலிருந்து வெளியேறி துஆ செய்வதால் தொழுகையின் அசல் நோக்கத்தை எவ்வாறு பெற முடியும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: எனவே தொழுகையை அழகுபடுத்தித் தொழுவதும், திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பார்ப்பதும் நமக்கு உண்மையான பெருநாளையும், நிரந்தரமான பெருநாளையும் உருவாக்கிக் கொடுக்கும். நாம் இந்த ரமலானின் அந்தப் பெருநாளை பெறுவதற்கு உடன்படிக்கை எடுத்துள்ளோமா? அவ்வாறில்லையென்றால், இன்றும் நாம் அந்த உடன்படிக்கையை செய்ய வேண்டும். நாம் நமது தொழுகைகளை அழகுபடுத்தித் தொழுவதற்கும், திருக்குர்ஆனை ஓதுவதற்கும், சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும். தமது பெருநாள் மகிழ்ச்சிகளை நிரந்தரமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இதுவே அதற்குரிய ஒரு வழியாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் திருக்குர்ஆனின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்:

நான் திருக்குர்ஆன் என்ற சொல்லை சீர்தூக்கிப் பார்த்தேன். அப்போது இந்த அருளுக்குரிய சொல்லில் ஒரு மகத்தான முன்னறிவிப்பு உள்ளது என்ற விஷயம் எனக்கு வெளிப்பட்டது. அது என்னவென்றால், இந்த திருக்குர்ஆன் தான் ஓதுவதற்கு தகுதியான வேதமாகும். ஒரு காலத்தில் இதுவே படிப்பதற்கு தகுதியான நூலாக இருக்கும். அக்காலத்தில் இன்னும் ஏராளமான நூல்கள் இதனுடன் சேர்க்கப்படும். திருக்குர்ஆனின் பக்கம் கவனம் செலுத்தாமல் ஏனைய புத்தகங்களில் இரவு, பகலாக மூழ்கியிருப்பவர் ஈமான் அற்றவர் ஆவார். திருக்குர்ஆனை ஓதுவதிலும், சீர்தூக்கிப் பார்ப்பதிலும் நமது ஜமாஅத்தினர் உயிராலும், உள்ளத்தாலும் மும்முரமாக இருக்க வேண்டும். இந்தக் காலத்தில் திருக்குர்ஆன் எனும் ஆயுதத்தை கையில் எடுங்கள். அவ்வாறு செய்தால் வெற்றி உங்களுடையதாகும். அந்த ஒளிக்கு முன்னால் எந்த இருளும் நிற்க முடியாது.

அதேபோன்று இறைத்தூதர் (ஸல்) அவர்களும் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: எந்த நபருக்கு திருக்குர்ஆனின் சிறிது பகுதி கூட மனனம் இல்லையோ அவரது உதாரணம், பாழடைந்த வீட்டைப் போன்றதாகும். திருக்குர்ஆனை வேகவேகமாக ஓதாதீர்கள். மாறாக, புரிந்து ஓதுங்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: எனவே இந்த ரமலானில் திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கம் கவனம் உருவாகியுள்ளது. சிலர் சில பகுதிகளை மனனம் செய்வதற்கும் முயற்சி செய்திருக்கக் கூடும். எனவே அதை நினைவில் வைக்க வேண்டும். அதை மீண்டும் மீண்டும் ஓத வேண்டும். அப்போது தான் நினைவில் அது தங்கி இருக்கும்.

அடுத்து திருக்குர்ஆனின் போதனைகளின் மீது சீர்தூக்கிப் பார்ப்பதற்கும் முயற்சி செய்ய வேண்டும். அதன் கட்டளைகளை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அன்னார் (ஸல்) அவர்களின் உண்மைப்பேரன்பரும் கூறியதுபோன்று அதனை சிந்தித்து பார்க்க வேண்டும். நாம் அதனை மனனம் செய்வதற்கும், சிந்தித்து பார்ப்பதற்கும், திருக்குர்ஆனை அதிக அதிகமாக ஓதுவதன் பக்கம் கவனம் செலுத்தும்போதுதான் நம்மால் அதற்குரிய உரிமையை நிறைவேற்ற முடியும். மேலும் அப்போதுதான் இந்த ரமலான் நம்மிடம் தூய மாறுதலை உருவாக்கி உள்ளது என்று நம்மால் கூற முடியும். அதன் காரணமாக திருக்குர்ஆனை ஓதுவதன் பக்கமும், புரிவதன் பக்கமும் நமக்கு கவனம் ஏற்பட்டுள்ளது என்றும் நம்மால் கூற முடியும். இதுவே உண்மையில் நமது பெருநாள் ஆகும். இந்தப் பெருநாளை இன்று நாம் மகிழ்ச்சியாக கொண்டாடி விட்டு இருந்து விடக் கூடாது. மாறாக, நிரந்தரமாக ஒவ்வொரு நாளும் அல்லாஹ்வின் வேதத்தை புரிந்து ஓதுவதற்கு உறுதிமொழி எடுக்க வேண்டும். உறுதிமொழி எடுத்தால் மட்டும் போதாது. மாறாக, அதற்காக ஓதவும் வேண்டும். ஏனென்றால் அதன் போதனைகளை புரிந்து ஆன்மீக முன்னேற்றத்தை நாம் பெற வேண்டும். நமது ஒவ்வொரு நாளும் பெருநாள் மகிழ்ச்சியை கொண்டு வரக் கூடிய நாளாக அமைய வேண்டும்.

அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குவதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நினைவிற் கொள்ளுங்கள்! ஒரு முஸ்லிம் அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகள் ஆகியவற்றை முழுமை செய்வதற்காக எப்போதும் தயாராக இருக்க வேண்டும். இறைவனின் இருப்பிலும், அவனது பண்பிலும் எவரும் இணை இல்லை என்று நாவினால் கூறுவதைப்போன்று, செயல் அளவிலும் அதனை வெளிப்படுத்த வேண்டும். அவனது படைப்பினத்துடன் அனுதாபத்துடனும், நன்மையுடனும் நடக்க வேண்டும். தமது சகோதரர்களிடம் எவ்வகையான பகைமையும், பொறாமையும், குரோத உணர்வும் கொள்ளக் கூடாது. மேலும் பிறரைப் பற்றி புறம்பேசுவதிலிருந்து முற்றிலும் விலகி விட வேண்டும். ஏராளமான நபர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள் என்றால் அவர்கள் தங்களுக்குள் குழப்பமும், பகைமையும் செய்பவர்களாக உள்ளனர். மேலும் தம்மை விட பலவீனமான மற்றும் ஏழ்மையான நபர்களை இழிவான பார்வையுடன் பார்க்கின்றனர். அவர்களுடன் தீய முறையில் நடந்து கொள்கின்றனர். ஒருவர் மற்றவரைப் பற்றி புறம் பேசுகின்றனர். தமது உள்ளங்களில் பகைமையும், காழ்ப்புணர்ச்சியும் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் இறைவன் கூறுகின்றான்: நீங்கள் ஓர் உடலைப் போன்று ஆகி விடுங்கள். நீங்கள் ஓர் உடலைப் போன்று ஆகிவிடும்போது தான் நாங்கள் எங்களது ஆன்மாக்களை தூய்மைப்படுத்திக் கொண்டோம் என்று உங்களால் கூற முடியும். ஏனென்றால் உங்களது விவகாரம் உங்களுக்குள் தூயதாக இருக்காத வரை இறைவனுடனும் விவகாரம் தூயதாக இருக்க முடியாது.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: எனவே நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த விருப்பத்திற்கேற்ப நம்மை நாம் ஆக்கிக் கொள்ளும்போதுதான் நமக்கு உண்மையான மகிழ்ச்சிக்குரிய பெருநாளாக இந்த நாள் அமையும். அதற்காக நாம் நம்மை நாமே ஆய்வு செய்ய வேண்டும். நாம் நமது சகோதரர்களின் உரிமைகளை செலுத்தி வருகின்றோமா? என்று ஆய்வு செய்ய வேண்டும். இனி இன்ஷா அல்லாஹ் இந்த உரிமைகளை செலுத்துவோம் என்று உடன்படிக்கை எடுக்க வேண்டும்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) கூறினார்கள்: ஆண்டின் இரண்டு நாட்கள் மட்டும் பெருநாளாக இருக்கக் கூடாது. மாறாக, ஒவ்வொரு நாளும் நமக்கு பெருநாளாக இருக்க வேண்டும். எனவே நாம் அல்லாஹ்வின் உண்மையான அடியாராக ஆகுவதற்கும், அவனது இறைவணக்கத்திற்குரிய உரிமைகளை செலுத்துவதற்கும் முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் அல்லாஹ் முன்பை விட அதிகமாக நமக்கு அருளுவான். நாம் திருக்குர்ஆனை ஓதி அதனைப் புரிந்து அதன்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். அப்போது அல்லாஹ் தமது அருட்களுக்கு நம்மை வாரிசாக்கி விடுவான். நாம் அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்கினால் இறைவன் தமது அன்பின் பார்வையை நம் மீது வீசுவான். இந்த விஷயங்கள் எவருக்கு கிடைத்து விடுவோ அவரது பெருநாள் அவருக்கு உண்மையான பெருநாளாக ஆகி விடும். அந்த உண்மையான பெருநாளை பெறக் கூடியவர்களாக நாம் ஆகி விடுவதற்கு நாம் துஆவும், முயற்சி செய்ய வேண்டும்.

(தமிழில்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad